சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2008 | ற. அவ்வல் 8 | மாசி 16 (27-2-77) ஞாயிறு | புத்தகம் 30 | இதழ் 89






# 'தற்காலிக ஏற்பாடுகளுக்கு கூட்டணி பலியாகக்கூடாது!'

## தலைமைப்பீடத்திடம் வேண்டுகோள்!

## நடவடிக்கைக்குழுவிலும் ஆராயப்படும்!



**ஆக இன்னும் 82 நாட்கள் மட்டுமே உயிர்வாழப்போகும் இன்றைய சிங்கள அரசாங்கத்துடன் எதுவித தற்காலிக இணக்கத்துக்கும் உடன்பட வேண்டாம் என்றும் இம்மாதிரியான முயற்சிகளில் ஈடுபடுவது எத்தனையோ தமிழ் இளைஞர்களின் தியாகத்தின்மீது இதுகாலவரை கட்டியெழுப்பிவந்த தமிழர் விடுதலைக்கூட்டணி இயக்கத்தையும் அதன் தமிழ்ஈழ இலட்சியத்தையும் முனைமழுங்கச் செய்வதாக அமைந்துவிடக்கூடுமென்றும், வேகமாக வளர்ந்துவரும் தமிழீழ விடுதலை உணர்வுக்கு தெரிந்தோ தெரியாமலோ — ஊறுதேடக் கூடிய எவ்வித முயற்சிகளிலும் ஈடுபட யாருக்கும் இடமளிக்கக்கூடாதென்றும், கூட்டணி தலைமைப்பீடத்திடம் கூட்டணிக் கிளைகளும், தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவைக் கிளைகளும் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பிவருகின்றன.**

இவ்வாருனதீர்மானத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றின் கொழும்புக் கிளைகள் கூட்டணித் தலைவர் தந்தை செல்வாவுக்கும் செயலதிபர்கள் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளன, தமிழ் இளைஞர் பேரவையின் நீர் கொழும்புக் கிளையின் இப்படியொரு தீர்மானத்தை அனுப்பி வைத்துள்ளது.

பண்டாரநாயகா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உரைநிகழ்த்திய கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை தன்னுடைய பேச்சின் முற்பகுதியில் தனிநாடு தீர்மானத்தை வற்புறுத்திவிட்டு, பிற்பகுதியில் பின்வருமாறு கூறியிருந்தார்:-

"அடிப்படை இலட்சியத்திலிருந்து இம்மியும் வழுவாமல், விட்டுக்கொடுக்காமல், இப்போது நிலவும் நெருக்கடியில், எதிர்மோதல்களைத் தவிர்த்து இரு நாடுகளுக்கு மிடையே சகவாழ்வையுருவாக்கும் நோக்கத்துடன் தற்காலிக ஏற்பாடுகளை ஆராய்வதற்கு எங்களுடைய இயக்கத்தை தனியே அழைத்தால் நாங்கள் அதைப்பற்றி பேசுவதற்கு தயாராக இருக்கிறேம்."

திரு. சி. கதிரவேற்பிள்ளையின் இந்தக்கருத்துக்கு சாதகமாகவும் பாதகமாகவும் இருவித கருத்துக்கள் கூட்டணி கிளைகளினுலும் தமிழ் இளைஞர் பேரவை, மகளிர்பேரவை, மற்றும் கூட்டணி ஆதரவாளர்களினுலும் முன்வைக்கப்படுகிறது.

"அரசின் ஆயுள் இன்னும் 82 நாட்களில் முடிவடைகிறது. இந்த 82 நாட்களுக்கிடையில் கூட்டணிக்கும் அரசுக்குமிடையே தற்காலிக ஏற்பாடுகள் எதுவும் உருவாகுவது சாத்தியமில்லை. அப்படித்தான் உருவாகினுலும் அதை அமுல்படுத்துவதற்கு அரசின் ஆயுள் நீடிக்கப்படவேண்டும். அரசின் ஆயுளை நீடிப்பதற்கு கூட்டணி பா. உ.க்களும் கைகொடுக்கவேண்டிவரும். கூட்டணி பா. உக்கள் 12பேரும் அரசின் ஆயுளை நீடிப்பதற்கு உதவி புரிய முன்வந்தாலும், போதிய மூன்றில் இரண்டு பெரும்பான்மைபலம் அரசுக்கு இப்போது கிடையாது. இந்த நிலையில் தற்காலிக ஏற்பாடுகள் பற்றி இயக்கம் தனது சிந்தனையைசெலுத்துவது அர்த்தமற்றது."

இப்படியொரு சாரார் கருதுகிறுர்கள்

"தமிழ்ஈழத்தின் எல்லைகளை வரையறுத்து, தமிழ் ஈழத்தில் சிங்களக்குடியேற்றத்துக்கு முற்றுப் புள்ளிவைத்து — தமிழ்ஈழத்துக்கு முழுமையான மாநில சுயாட்சி (தனியே பொலிஸ்

—8-ம் பக்கம் பார்க்க

### ஆபீஸ் பையன் கேட்கிறுன்



தமிழர்விடுதலைக்கூட்டணியின் 'உதய சூரியன்' சின்னத்தை தனக்குத் தரும்படி சுயாட்சிக்கழகம் கேட்டிருக்கிறதாம். ஏன்சார், பொறுக்கித்தனத்துக்கு மறுபெயர் தான் சுயாட்சிக் கழகமோ? என்று கேட்கிறுன் நம் ஆபீஸ் பையன்.

## ● இனவெறிப் பிரச்சாரத்துக்கு யூ.என்.பி. தயாராகிறது?

# சிங்கள நாட்டை தமிழருக்கு விற்க சிறிமாவோ திட்டமாம்!

பண்டாரநாயகா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தமிழ் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களுக்கும் பிரதமருக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தையை பின்னணியாக வைத்து, தேர்தல் பிரசாரத்தின்போது சிங்கள மக்கள் மத்தியில் ஒரு பெரிய புரளியைகிளப்பிவிட ஐக்கிய தேசிபக் கட்சி தயாராகிவருவதாக தெரியவருகிறது. சிங்கள மக்களுக்குரிய நாடான சிறிலங்காவை பிரித்து தமிழர்களுக்கு கொடுப்பதற்கு சிறிமாவோ சம்மதித்துவிட்டதாகவும், சிறிமாவோ ஆட்சிக்கு மீண்டும் வரும் பட்சத்தில் இது நடைபெறும் என்றும் ஒரு பெரிய பூதத்தை தேர்தல் சமயத்தில் யூ.என்.பி. கிளப்பிவிடக் கூடுமென அரசியல் அவதானிகள் கூறுகிறுர்கள்,

இப்படிச்செய்வதன்மூலம் சிங்கள மக்களிடமிருந்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை தட்டிக் கொள்ள ஒரு வாய்ப்பு இருப்பதாக சில யூ.என்.பி. பின்வரிசை உறுப்பினர்கள் கருதுகிறுர்களாம்.

இந்தப் பிரசாரத்தை யூ.என்.பி.யின் முன்னணித்தலைவர்கள் மேடைகளில் செய்யமாட்டார்கள் என்றும். தனிச் சிங்களப்பகுதிகளில் வாக்குவேட்டையாடச்செல்லும்போது யூ.என்.பி. ஆதரவாளர்கள் ரகசியமாக இந்தப்பிரசாரத்தை வீடுவீடாக மேற்கொள்ளக்கூடும் என்றும் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி. தமிழன்பன்
கொழும்பு-8

கே: வருகிறபொதுத்தேர்தலில் புத்தளம் தொகுதியில் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் போட்டியிடுவாரா?

ப: தமிழ் பேசும் மக்கள் கணிசமான அளவு எங்கெங்கு வாழ்கின்றனரோ— அங்கங்கெல்லாம் கூட்டணி போட்டியிடும்!

ஃ

தர்மராஜா நடராஜா,
வெள்ளவத்தை

கே: புத்தளம் பள்ளி வாசலில் கொலை செய்யப்பட்ட தமிழ்பேசும் முஸ்லிம்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்படுமா?

ப: இறந்தவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு இஸ்லாமிய நெறிப்படி இடமில்லை; அவர்களுக்கு எங்கள் இதயங்களே நிரந்தர நினைவுச் சின்னம்; தமிழ் ஈழம் அமைப்பதே அழியாத நினைவுச்சின்னம்!

ஃ

மா. கிருபானந்தன்
குமரகோட்டம்
மல்லாகம்

கே: தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டால் கூட்டணி தனிநாடு கோரிக்கையை கைவிடுமா?

ப: தமிழ்ஈழம் அமைப்பதென்பது ஒரு கோரிக்கையல்ல; அது நமது இதய வேட்கை; சுதந்திரதாகம்! தனிநாடு மூலம்தான் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வே காணமுடியும் என்பது கூட்டணியின் முடிந்த முடிவு.

ஃ

கௌரி
கொழும்பு 14

கே: அமரர் ஜீ. ஜீ. அவர்களின் கடந்தகால அரசியல் கொள்கைகளை ஆதரிக்கிறீர்களா?

ப: 1947க்கு முற்பட்ட ஜீ.ஜீ.யையும், 1972ல் கூட்டணி ஏற்பட்ட பின்னர்'தனிநாடு' முழக்கமிட்ட ஜீ.ஜீ.யையும், நாம் எப்போதும் ஏற்றுக்கொள்ளுகிறோம்! ஏனைய காலங்களில் நாம் அவருடன் முட்டி மோதி நின்றதை மறந்திருக்க மாட்டீர்களே!

ஃ

ச. வேலுப்பிள்ளை
7ம் கட்டையடி
தொண்டமானாறு

கே: வருகிற தேர்தலில் காசி அண்ணா எந்தத் தொகுதியில் போட்டியிடுவார்?

ப: காசி ஆனந்தன் தந்தை செல்வாவின் ஆணைக்கும் கூட்டணியின் முடிவுக்கும் கட்டுப்பட்டவர். கூட்டணி என்ன கட்டளையிடுகிறதோ அதையே அவர் செய்வார். ஆனால் அவர் மட்டக்களப்பு தொகுதியில் தான் போட்டியிடவேண்டுமென்று அங்குள்ள இளைஞர்கள் பலர் விரும்புவது உண்மை. இளைய தலைமுறையின் விருப்பத்துக்கு தலை வணங்கி, சொல்லின்செல்வர் திரு. இராசதுரை தனது தம்பி காசி ஆனந்தனை மட்டக்களப்பில் போட்டியிடும்படி விட்டு விட்டு, தான் கிழக்கு மாகாணத்தின் வேறோர் தொகுதியில் போட்டியிடவும் கூடும்! இதுபற்றிய இறுதி முடிவை தந்தை செல்வாவும், கூட்டணியின் நியமன சபையும் தான் எடுக்கவேண்டும். அந்த முடிவுக்கு கட்டுப்படும் பண்பு காசி ஆனந்தனிடம் உண்டு!

ஃ

பி. பாலகிருஷ்ணன்
மெயின் வீதி
மத்துகம

கே: ஆளுங்கட்சி தேசிய அரசுப்பேரவைக் கூட்டத்தொடரை மே 19ந் திகதிக்கு ஒத்தி வைத்ததன் மூல காரணமென்ன?

ப: அத்திவாரம் ஆட்டம் கண்டுவிட்டதுதான்!

ஃ

ஞா. பழனித்தம்பி
திராவிடத்தம்பி
களுதாவளை
மட்டக்களப்பு

கே: லோக சபைத்தேர்தலுடன் சட்டமன்றத்தேர்தலையும் நடத்தினால் தமிழ் நாட்டில் தி. மு. கழகமே ஆட்சியைக் கைப்பற்றும் என்கிறேன் சரிதானே?

ப: லோகசபைத் தேர்தலுடன் சேர்த்து சட்டசபைத்தேர்தலை நடத்தாவிட்டாலும், சட்டசபைத் தேர்தல் நடைபெறும் போது தி. மு. கழகமே தமிழக ஆட்சியைக் கைப்பற்றும்!

ஃ

அ. அமலதாஸ்
வாகரை

கே: தமிழ் நாடுகோரிக்கைக்கு முட்டுக்கட்டை போடுகிறார்களே ஐ. தே. கட்சியினர் அவர்களைபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்.

ப: முட்டுக் கட்டைகள் போடப் போடத்தான், தமிழ் ஈழப்போராட்டம் இன்னும் வேகமடையும்.

ஃ

கே. ஏ. சோதிநாதன்
பசறை

கே: அமரர் "திரு"வும் "ஜீ. ஜீ."யும் மேல் உலகத்தில் சந்திக்க நேர்ந்தால் என்ன பேசுவார்கள்?

ப: பரவாயில்லை, நாம் இங்கு வந்துவிட்டாலும் ஈழத்தமிழர் நலன்பேண இளைய தலைவன் அமிர்தலிங்கம் எனும் வீரன் அங்கு இருக்கிறான் என்று சொல்லி மனம் அமைதியடைவார்கள்!

ஃ

இரகுபதி நடராஜா
பெர்னாண்டோ மாவத்தை
வெள்ளவத்தை

கே: ஸ்ரீலங்கா அரசாங்கம் இவ்வளவு காலமும் சிறையில் இருந்து அவஸ்தைப்பட்ட தமிழ் இளைஞர்கள் சிலரை விடுதலைசெய்தது. அரசின் இந்த ஞானோதயத்துக்கு காரணம் என்ன?

ப: ஞானோதயம் எதுவும் காரணமல்ல; சட்டி சுட்டதடா கைவிட்டதடா என்ற நிலைதான்! அவசரகால நிலை அகற்றப்படும்போது தமிழ் இளைஞர்களை விடுதலைசெய்வதைத் தவிரவேறு வழி இல்லையே!

ஃ

செல்வி. த. செல்வராஜா
பிரதான வீதி
களுவாஞ்சிக்குடி

கே: தமிழர்களுக்கு விடுதலை கிடைக்க தமிழ்ப்பண்பாட்டுடன் பிறந்த பெண்கள் செய்யக்கூடியவற்றை கூறுவீர்களா?

ப: 1) முதலில் தமது கணவனோ, சகோதர சகோதரிகளோ பிள்ளைகளோ — விடுதலைப் போராட்டத்திலீடுபடுவதற்கு முட்டுக்கட்டையாக—தடையாக இருக்கக்கூடாது.

2) தமிழீழ விடுதலை உணர்வின்றி சோம்பிக்கிடக்கும் தமது குடும்பத்தினரைத் தூண்டி, விடுதலைப் பணியில் ஈடுபட வைக்கலாம்.

3) ஒவ்வொருநாளும்வீட்டுத் தேவைக்கு செலவுசெய்யும் பொருளில் அல்லது பணத்தில் ஒரு பகுதியை விடுதலை இயக்கத்துக்கென ஓர் உண்டியலிலோ பானையிலோ போட்டுவைத்து சில மாதங்களின்பின்னர் கூட்டணியிடம் அதை ஒப்படைக்கலாம்.

4) தமிழ் மகளிர் பேரவையில் உறுப்பினராகச் சேர்ந்து இயக்கப் பணிகளில் ஈடுபடலாம்.

5) நாள்தோறும் கடவுளை வழிபடும்போது தமிழின விடுதலைகோரி பிரார்த்தனை செய்யலாம்.


6) விடுதலைப் போராட்டத்திலீடுபட்டு, தலைமறைவாக இருக்கவேண்டிய இளைஞர்களுக்கு உதவி புரியலாம்.

7) தேவையேற்படும் போது வீரமுள்ள பெண்கள் தமிழ் மானம் காக்கத் துப்பாக்கிகூட ஏந்தலாம்.

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

திருவாளர் குயுக்தியார்
194 ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

# இடைக்கால ஏற்பாடுகள்
# இப்போது அவசியமா?




அன்பின் கோவையண்ணா!

தங்கள் உணர்ச்சியூட்டும் அரசியல் மடலினாலும், 'எண்ணச்' சுழற்சியினாலும் நாளும் தமிழினத்தின் நாடி நரம்புகளைச் சூடேற்றி வருகிறீர்கள்! தமிழினத்தின் விடுதலை வரலாற்றில் தொய்வுகள் ஏற்படும் பொழுதெல்லாம் மிகவும் சிரமப்பட்டு முறுக்கேற்றிக்கொண்டிருக்கிறீர்கள்! அதனால் உங்களுக்கும் பல நெருக்கடிகள் உண்டாவதும் எமக்குத் தெரியும்! ஆனாலும் உங்கள் இலட்சியப்பணி தொடரட்டும்!

தமிழ் தேசியப் பேரவை உறுப்பினர்களுடன் பிரதமரும் மற்றும் சில அமைச்சர்களும் நடத்திய பேச்சுவார்த்தை ஒரு முடிவுக்கும் வராமல் தொடர்ந்தும் பேச்சுக்கள் நடக்கவிருப்பதாகப் பத்திரிகை மூலம் அறிந்தோம். தமிழினத்தின் விடுதலை வரலாற்றில் மீண்டும் ஒருதொய்வு ஏற்படப்போகிறதா என்று ஏங்கும் இதயங்களின் சார்பில் இம்மடலை வரைகிறேன். எங்கள் உரிமைக் குரலாம் 'சுதந்தின் மூலம்' என் கருத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

ஈழத்தமிழகத்தின் இளைய தலைமுறையினர் தமது இரத்தத்தைச் சிந்தியது ஏன்? தங்கள் இன்னுயிரை பலி கொடுத்தது யாருக்காக? வாழும் இளமைப் பருவத்தைப் பாழும் சிறையிலும், காட்டிலும், மேட்டிலும் கழித்தது எவருடைய வாழ்வுக்காக? இன்றும் தமது தாய்தந்தையரைக் காண முடியாமல் வேற்று நாடுகளில் அரசியல் அநாதைகளாக அடைக்கலம் புகுந்திருப்பது எதற்காக? ஆட்சி நடத்தும் அம்மையாருடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கா? அல்லது ஆட்சி மன்றக் கதிரைக்கு ஆள் அணிசேர்ப்பதற்கா? இல்லை! தாயகத்தின் மீட்சிக்காக! தமிழரின் வாழ்வுக்காக!

எனவே ஈழத்தமிழர்களின் உரிமை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியை ஒரு விடுதலை இயக்கமாக அங்கீகரித்து உத்தியோக முறையில் அதற்கு அழைப்பு விடுக்காமல் தனிப்பட்ட முறையில் பேச்சுக்கு அழைத்தது எமது இயக்கத்தையே அவமதிக்கும் செயலாகும். அதனைப் பிரதமருக்குச் சுட்டிக்காட்டியதையும், தமிழீழம் அமைப்பதுதான் எமது முடிந்த முடிவென்று பேச்சுவார்த்தையின் போது எடுத்துச் சொல்லப்பட்டதையும் முழுமனதுடன் வரவேற்கிறோம். ஆனால் "நெருக்கடிகளைக் குறைப்பதற்கும், எதிர் மோதலைத் தடுப்பதற்கும், சகவாழ்வைக் காண்பதற் இடைக்காலத் தீர்வுகளை மேற்கொள்வதற்காக பேச்சுவார்த்தை நடத்த நாம் தயார்" என்று எமது இயக்த்தைச் சேர்ந்த தே. பே. உறுப்பினர் பேசியது வரவேற்கத்தக்கதல்ல.

பிரதமரும் அவருடன் உறவாடும் தமிழ் தே. பே. உறுப்பினர்களும் சேர்ந்து இடைக்காலத் தீர்வுகளை ஏற்படுத்தட்டும் அதற்கு நாம்எதிர்ப்பாளர்களல்ல. ஆனால் நாம் 'தமிழீழ' அமைப்புப் பற்றியே பேசுவோம். அல்லது யாருடனும் பேசத் தயாரில்லை என்று அம்மையாருக்கும் அவரின் அடியாட்களுக்கும் ஆணித்தரமாக எடுத்துக் கூறியிருக்கவேண்டும்! அதனை அவர்கள் ஏற்காவிடில் அவர்களுடைய தேர்தல் நாடகத்தை அவர்களையே நடத்தும்படி கூறிவிட்டு எமது நா. உ.க்கள் வெளியேறியிருக்கவேண்டும்! இன்னும் காலங் கடந்துவிடவில்லை! காசியண்ணா சொன்னதுபோல் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தை செந்தீயின் வீச்சு வார்த்தையாக அமையவில்லையே என்று ஏங்கும் இதயங்களில் நானும் ஒருவன்! "மின்மினி கொள்வோமா?" என்று நீங்கள் எழுதிய அரசியல் மடலை வாசித்து முடிவதற்குள் இடைக்காலத் தீர்வுகள் என்ற மின்மினிக்காகப் பேச்சுவார்த்தை நடத்தத் தமிழர் கூட்டணி தயார் என்று கூறியமை, என் போன்ற இளம் இதயங்களைத் துடிதுடிக்கவைத்தது! அண்ணா! உங்களுக்கே அது பேரிடியாக இருந்திருக்கும்! எமக்கு வ்டுதலைதான் வேண்டும்! எமது இயக்கம் இறுதி மூச்சுவரை அதற்காகவே போராடவேண்டும்! இடைக்காலச் சலனங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது! இளைஞர் இதயங்கள் எரிமலையாய்க் குமுறுகின்றன!

தமிழர் விடுதலைக் கூட்டணி நா. உக்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்! சுமார் ஏழு வருடங்களாக நீங்கள் பேரவையிலே எங்கள் உரிமைக்காகக் குரல் கொடுத்தீர்கள்! இறுதியான முடிவை உறுதியாகவும் சொல்லிவிட்டீர்கள்! இனிமேல் தனித்தனி உங்களுக்கு அனுப்பப்படும் எந்தஅழைப்புக்களையும் ஏற்று எவ்வித பேச்சுவார்த்தைக்கும் செல்லவேண்டாம்! அதற்கு எமது கூட்டணியும் அனுமதிக்கக்கூடாது! வேண்டுமானால் பிரதமர் தமிழர்களின் ஒற்றுமையின் உயிர் நாடியாம் தமிழர் விடுதலைக் கூட்டணியை அங்கீகரித்து அழைத்து தமிழீழத் தீர்மானத்தின் அடிப்படையில் பேசட்டும்! வேறெந்தப் பேச்சும் எமக்குவேண்டாம்! இறுதி இலட்சியத்தை அடைய உறுதியுடனும், நம்பிக்கையுடனும் செயற்படுவோம்! மலரட்டும் தமிழீழம்!

இவ்வண்ணம்
அன்புத் தம்பி
காங்கை வேலன்
கொழும்பு-5
21-2-77

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முயல்வேட்டை வேண்டாம்!

"தமிழ் மகனொருவனுக்கு தனிப்பிரச்சினைகள் இருப்பதற்கு அடிப்படைக்காரணம் என்ன? எமது தனித்துவத்தைப்பேணுவதாயின், நாம் போராடவேண்டியது எதற்கெதிராக என்பதை நோக்குவோமாயின், சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து எமது இனத்தைப் பாதுகாப்பதற்கு ஒரே வழி இழந்த எமது நாட்டை மீளப்பெறுவதுதான் என்பது தெளிவு. தமிழ் ஈழத்தில் சிறீலங்காவின் இராணுவம், கடற்படை, ஆகாயப்படை என்பன முகாமிட்டிருப்பதும், தமிழ் மக்களுக்கு தனிப்பிரச்சினைகள் இருந்துகொண்டிருப்பதும், அப்பிரச்சினைகளுக்காகப் போராட முனைபவர்கள், சிறீலங்காவின் படைகளால் அடித்துநொருக்கப்பட்டுக்கொண்டிருப்பதும், தூரதேச அந்நியரால் கைப்பற்றப்பட்டு தம்வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் தமிழ் ஈழத்தவரை சுதந்திரமாக வாழ விடுவதற்கு சிங்கள மக்கள் தயாரில்லையென்பதைத் தவிர வேறெதையும் காட்டவில்லை. எனவே சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட எமக்குள்ள ஒரே வழி எமது நாட்டை மீளப்பெறுவதுதான்!

"ஆனல் தமிழனைத் தமிழன் ஆள்வதால் பிரச்சினை தீர்ந்துவிடாது என்ற கூற்றில் உண்மை இல்லாமலில்லை. தமிழனைத்தமிழன் ஆள்வதால் மட்டும்—அதாவது வெறும் அரசியல் கைமாற்றத்தினல் மட்டும் தமிழனின் பிரச்சினைகள் தீர்ந்துவிடப்போவதில்லை. தமிழ்ச் சமூகத்திலே புரையோடிப் போய்க் கிடக்கின்ற சமூகப்பிரச்சினைகளுக்கு தீர்வு, தமிழனைத் தமிழன் எவ்வாறு ஆள்கிருன் என் பதிலேதான் தங்கியிருக்கிறது.

"ஆயிரம் சாதிசொல்லி தமிழன்தன்னுள் பிரிந்து நிற்பதற்கும் மற்றும் பல சமூக ஏற்றத் தாழ்வுக்கும் காரணமான நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ முறைகள் தகர்க்கப்பட்டு, உலக சோசலிச நாடுகள் காட்டிநிற்கும் வழியிலே தமிழீழம் புனரமைக்கப்படுவதுதான் தமிழினத்தின் பிரச்சனைகளுக்கு ஒரே தீர்வு. சுருங்கக் கூறின், அரசியல் சுதந்திரம், பொருளாதார சமத்துவம், சமூக சகோதரத்துவம், என்பவற்றை உள்ளடக்கிய விடுதலை ஒன்றே எம் இனத்தின் தனித்துவம் பேணப்படுவதற்கான வழி. எனவே சிந்திக்கத் தெரிந்த சந்ததியைச் சேர்ந்த மாணவ சமூகம் வெறும் அரசியல் கைமாற்றத்துக்காக மட்டும் போராடாமல் இன விடுதலைக்காக போராடத் தயாராகட்டும்! பச்சோந்திகள் தூக்கியெறியப்படட்டும்! விடுதலை ஒன்றே நம் இலக்காகட்டும்!"

நண்பா, மேற்கண்ட உணர்ச்சியும் எழுச்சியும், ஆழமும் தெளிவும் மிக்க கருத்துக்கள் யாரோ ஒரு அரசியல் வாதியோ, கூட்டணித் தலைவர்களோ, வெளியிட்டதொன்றல்ல; தமிழ்ச் சமுதாயத்தின் வளரும் குருத்துக்கள்—எதிர்காலத் தலைவர்கள்—தமிழ் ஈழத்தின் எதிர்காலச சிற்பிகள் — நம் மாணவச் செல்வங்களின் சிந்தனையிலே அரும்பிய கருத்துக்களே மேலே வெளியிடப்பட்டிருப்பவை!

ஆம் நண்பா, தமிழ் ஈழத்தின் யாழ்வளாகத்தில் இயங்கிவருகின்ற தமிழ்மன்றத்துத் தம்பிகள், மேற்படி மன்றத்தின் சார்பில் வெளியிட்டிருக்கும் 'செந்தழல்' என்ற சஞ்சிகையின் ஆசிரியர் குறிப்புரையையே நான முதலில் தந்திருக்கிறேன். செந்தமிழ்ஈழத்தின் அடிமை நிலைகண்டு சீறியெழுகின்ற செந்தமிழ் செல்வங்கள் வெளியிட்டிருக்கும் இச் 'செந்தழல்' ஏட்டின் முகப்பில் முத்தமிழ் வேந்தர்களாம் சேர, சோழ பாண்டிய மன்னர்களின் இலச்சினைகளான புலியும், வில்லும், மீனும், அத்துடன் இராவணனின் யாழும், சுதந்திரத் தமிழ் ஈழத்தின் சின்னமான உதய சூரியனும் அமைந்த முத்திரை பொறிக்கப்பட்டிருப்பதும், சஞ்சிகையின் வெளியீட்டு முகவரியில், 'தமிழ் ஈழம்' எனும் நம் தாய் நாட்டின் திருப்பெயர் பொறிக்கப்பட்டிருப்பதும், நமது இளைய தலைமுறையின் விடுதலை உணர்ச்சியை கோடிட்டுக் காட்டுகிறது. தமிழ் ஈழத்தை விடமக்கள் தொகையிலும், விஸ்தீரணத்திலும் சிறிதாகவுள்ள 20 குட்டி நாடுகளின் விபரங்களை திறக்காத கண்களும் திறப்பதற்காக 'செந்தழ'லிலே தமிழ் மன்றத்துத் தம்பிகள் தொகுத்துத் தந்திருக்கிருர்கள்.

யாழ்வளாகத்தின் நிர்வாகம்—தலைமை—சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு ஆமாம்சாமி போடும் அடிமைத் தமிழர்கள் சிலரது கைகளிலே இருந்து வந்த போதிலும் அங்கு வளர்ந்து வரும் தமிழ் மாணவ சமுதாயம் ஈழ விடுதலை உணர்வுகொண்ட வேங்கைகளாக உருவாகி வருகிறது என்பதை 'செந்தழல்' காட்டுகின்ற போது என் சிந்தையிலே சில தினங்களாக ஏற்பட்டிருந்த மனச் சோர்வு சஞ்சலம், மனப்போராட்டம் அத்தனையும் இருந்த இடம் தெரியாமல் மறைகின்றது!

வீரர்கள் கோட்டமாக—விடுதலை வேங்கையாக—தமிழ் ஈழ சுதந்திரத்தில் அழுத்தமான நம்பிக்கை கொண்டதாக—விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய வீரர்களாக—நாளைய சமுதாயம் உருவாகி வருவதை காணும்போது மகிழ்ச்சியலைகள் உள்ளத்தில் மோதிடுவது ஒன்றும் புதுமையல்லவே!

வயது ஏற ஏற—வாழ்க்கையின் வேறு சுமைகள் அதிகரிக்க களத்திலிருந்து விலகுவோமோ என்று சிலருக்கு சபலம் ஏற்படுவது வழக்கம். ஆனல் இளைஞர்கள் மாணவர்கள் தாம் எந்தச் சபலத்துக்கும்விலைபோகாதுசலிப்புக்கும் ஆளாகாது—விளைவைப்பற்றி யோசிக்காது—ஏன் தம் உயிரைப்பற்றியே யோசிக்காது—எந்த நேரத்திலும் போர்க்களத்திலே நிற்பார்கள்! புயல் போலச் செயல்படுவார்கள்—புதிய புறநானூறு எழுதுவார்கள்!

தமிழ் ஈழத்தின் விடுதலை ஒன்றுக்காகவே தமிழர் விடுதலைக்கூட்டணி என்ற அமைப்பின் கீழ் நின்று தமிழினம் இன்றைக்கு ஒரே உணர்வுடன் போராடி வருகிறது. தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை தமிழ் இளைஞன் தன் உயிராக, உணர்வாக, ஆத்மாவாக கருதுகிறுனே தவிர—அதை வெறும் பொழுது போக்கு அரசியலாகக் கருதவில்லை! தமிழ ஈழத்தை மீட்பதொன்றே தமிழினத்தின் அபிலாஷைகளுக்கு தீர்வுகாண்பதாக இருக்கும்; அதற்குக் குறைந்த எதுவும் நம் அபிலாஷைக்கு ஈடாகாது. தமிழ் ஈழ சுதந்திரத்தை தமிழன் இன்று தனது சொந்த வாழ்க்கைப் பிரச்சினையாகவே கருதுகிறுன். "தமிழ் ஈழம்" என்ற உச்சாடனமே இன்றைக்கு தமிழனை ஒரேயணியில் திரட்டி, ஒரு கொடியின் கீழ் ஒரு தேசிய இனமாக கட்டிவைத்திருக்கிறது. மெத்தப் படித்தவர்களும் சரி, படிக்காதவர்களும் சரி—ஏழைகளும் சரி பணம் படைத்தோரும் சரி—முதலாளியும் சரி, தொழிலாளியும் சரி—காங்கேசன்துறையில் கடை வைத்திருப்பவனும் சரி, காலியிலே கடைவைத்திருப்பவனும் சரி—ஈழத் தமிழன் எங்கிருந்தாலும், அவன் தனக்கொரு நாடு—சுதந்திர ஈழம்வேண்டும் என்பதை உணர்ந்து விட்டான்! விடுதலை வேட்கை இன்று வெறியாக மாறிவருகிறது. அற்ப சலுகைகளிலும் இடைக்கால ஏற்பாடுகளிலும் நம் நேரம், நினைப்பு, சக்தி அனைத்தையும் செலவிட்டு நம்பி ஏமாந்து காலத்தை வீணடிப்பதை விட—அமைப்பைப் பலப்படுத்தி—திட்டங்களை வகுத்து—வியூகங்களை அமைத்து—சுதந்திரப்போருக்கு தயாராகவேண்டும் என்றே தமிழர்கள் எதிர்பார்க்கிருர்கள்! இந்த சுதந்திர உணர்வுடன்தான் கூட்டணியைச் சுற்றி இன்றைக்கு தமிழ்மக்கள் திரண்டு நிற்கிருர்கள்!

## அரசியல்[illegible]

தமிழ் இளைஞர்கள் பல்லோர் சிறைசென்றதும்—தமது வாழ்வை அழித்துக்கொண்டதும், 'சுதந்திரம்' என்ற ஒன்றுக்காகவேதான்! அரசிடமிருந்து வேறு அற்ப சலுகைகள் பெறுவதற்காகவல்ல!

சிவகுமாரன் என்ற இருபத்திரண்டு வயது செந்தமிழ்க்காளை—தமிழ்த்துரோகி துரையப்பாவின் காருக்குக் குண்டு வீசியதாகவும்,ஐக்கிய முன்னணி அமைச்சர் ஒருவருக்கு குண்டு வீசியதாகவும், கைதுசெய்யப்பட்டு சிறையில் கொடும் துன்பங்களை அனுபவித்து—இறுதியில் தமிழ் மாநாட்டுப் படுகொலைக்கு காரணமானவரென கருதப்படும் பொலிஸ் அதிகாரியொருவரை தீர்த்துக்கட்ட முயன்ருன் என்றுபொலிசாரால் தலைக்கு விலை பேசப்பட்டு இறுதியில் நஞ்சுகுடித்து உயிர் தமிழுக்கும், உடல்மண்ணுக்கும் தந்தான்—

அந்தத் தியாகியின் பிணம் நம்கண் முன்னல் கிடக்கிறது!

தமிழினத்தின் மத்தியிலுள்ள துரோகக் களைகளை பூண்டோடு கிள்ளியெறிய முயற்சித்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில்—அமரசிங்கம், திசைவீரசிங்கம், பூபதி, நடேசானந்தம், ஞானசேகரம், சிவஜெயம், சிறீஸ்கந்தராசா, ஜீவராசா, சத்தியசீலன் போன்ற எத்தனையோ இளைஞர்கள் சிறீலங்காவின் வெலிக்கடை வெஞ்சிறைக் கோட்டத்துக்குள் ஆண்டுக்கணக்காக அடிகளையும் உதைகளையும், சித்திரவதைகளையும் தாங்கிக்கொண்டிருந்துவிட்டு—தளராத உள்ளத்துடன் அண்மையில் தான் புடம்போட்ட தங்கங்களாய்வெளியே வந்திருக்கிருர்கள்!

ஆண்டபரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை என்றுகேட்ட உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும், வீறுகொண்ட காளை சேனாதிராசாவும், வண்ணையும் 4 ஆண்டுகளை சிறைக்குள் கழித்து விட்டு வெளியே வந்திருக்கிருர்கள்—

துரையப்பாவைக் கொலைசெய்தனர்என்ற குற்றச்சாட்டின் பேரில் பால்மணம் மாருத ஏழு பசுங்கிளிகள் நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடி நிற்கின்றன!

**இத்தகைய தியாகங்களினுல் உருவான இயக்கம்—விடுதலை உணர்ச்சி திசைமாறி, பாழ்பட்டுப் போகக் கூடாது, சுதந்திர இயக்கத்தை குறுக்கே செல்லவிடாமல் தடுத்து—நேரிய பாதையில், நெறியானபாதையில் செல்லவைக்கவேண்டியது கூட்டணியின் பொறுப்புவாய்ந்த தலைவர்களின்—குறிப்பாக தமிழ் இளைஞர்களின் நம்பிக்கையை பெற்றுள்ள அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களின் இன்றைய உடனடிக் கடமையாகும்,**

"கானமுயலெய்த அம்பினில் யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது"

என்பது வள்ளுவர் வாக்கு, காட்டு முயலை வேட்டையாடி வீழ்த்துவதிலும், யானையுடன் போரிட்டு தோற்பது பெருமைதருவதாகும். யானை வேட்டையிலிறங்கிய நாம் முயல் வேட்டையில் ஏன் நமது எண்ணத்தை திருப்ப வேண்டும்?

கூட்டணித் தலைவர்களை தமிழ் மக்கள் முழுக்க முழுக்க நம்புகிருர்கள். நம்பத்தான் வேண்டும்; நம்பிக்கை இல்லாவிட்டால் 'இயக்கம்' என்று ஒன்று கிடையாது என்பது உண்மைதான்! ஆனல் கூட்டணித் தலைவர்களும் நம்பிக்கைக் குரியவர்களாக—சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக — சலனங்களுக்குட்படாதவர்களாக—நடந்து கொள்ள வேண்டும். தலைவர்களின் ஒவ்வொரு சொல்லையும் செயலையும், தமிழ்மக்கள் மட்டுமல்ல—உலக நாடுகள் அனைத்துமே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றன. நமது பலத்தையும், பலவீனத்தையும், உறுதியையும், உள்ளப்பாங்கையும், நமது சொல்லிலிருந்தும், செயலிலிருந்தும் உலகம் ஊன்றிக் கவனித்துக்கொண்டு இருக்கிறது.

நண்பா, தேர்தல் வேலை செய்வதற்கும், தேர்தல் மேடைகளில் பேசுவதற்கும், களத்தில் இறங்கிப் போராடுவதற்கும், களைபிடுங்குவதற்கும்,சிறைத் துன்பங்களை அனுபவிப்பதற்கும் மட்டும்தான் இளைஞர்கள்; இயக்க சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்போது இளைஞர்களின் கருத்துக்கள் கேட்கப்படத் தேவையில்லையென்ற நிலை இருக்கக் கூடாது.

1972ம் ஆண்டிலிருந்து சிங்களக் குடியரசுச்சட்டம் வந்த காலம் தொட்டு, இளைஞர்கள் நடத்திய போராட்டங்களும், அவர்கள் சிறைகளில் பட்ட துன்பங்களும்தான் நமது விடுதலை இயக்கத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கிறது! இத்தகைய இளைஞர் சக்தியின் கருத்துக்கள், இயக்கத்தின் கொள்கை, வழிமுறைகள் சம்பந்தமான தீர்மானங்கள் எடுக்கப்படும்போது கவனத்துக் கொடுக்கப்படவேண்டும். இளைஞர்கள் உதாசீனம்செய்யப்படுவதோ — புறக்கணிக்கப்படுவதோ—இயக்க வளர்ச்சிக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இதை கூட்டணியின் சில பா. உ.க்கள் புரிந்துகொள்ளவேண்டும்!

கூட்டணியின் கொள்கை தனிநாடுதான்! வட்டுக்கோட்டையில் நிறைவேற்றப்பட்ட தமிழ் ஈழத் தீர்மானமே அதன் உயிர் நாடி. அதைச் சுற்றித் தான் தமிழ் சமுதாயம் கூட்டணியுடன் இன்று இணைந்து நிற்கிறது. கூட்டணியின் இந்தத் தனி நாடு கொள்கைக்குப் பதிலாகவோ — அல்லது அதை விட்டுக்கொடாமலோ — வேறு இடைக்கால உடன்பாடுகள் எதையும் செய்துகொள்வதென்று கூட்டணியின் பொதுச்சபையோ, நடவடிக்கைக் குழுவோ போராட்டக்குழுவோ எந்த ஒரு கூட்டத்திலும் எந்தக் கட்டத்திலும் இதுவரை தீர்மானித்ததில்லை!

எனவே நண்பா, நமது கோப்பாய் பா.உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் "தற்காலிக ஏற்பாடு" பற்றிக் குறிப்பிட்டது ஏதாவது ராஜதந்திர அடிப்படையிலும் அமைந்திருக்கலாம்; அதையிட்டு கூட்டணியின் நடவடிக்கைக் குழுவும் பொதுக்குழுவும் ஆலோசிக்க வேண்டும்.

எந்த நிலை வந்தாலும், கூட்டணி இயக்கத்தையும் அதன் இலட்சியத்தையும் எப்படியும் கட்டிக் காத்திட உறுதிகொள்வோம்! நாம் நம் அருமைத் தலைவர்களை நேசிக்கத்தான் செய்கிறேம்; மதிக்கத் தான் செய்கிறேம்; ஆனல் அதைவிட தமிழ்ஈழ விடுதலையை அதிகமாக நேசிக்கிறேம்!

வளர்க தமிழர் விடுதலைக் கூட்டணி
எழுக உதயசூரியன்!

**உன் அன்பு தோழன்.**

**கோவை-மகேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

### கூட்டணிக்கு ஒரு வார்த்தை!

இம்மாதம் 21ம் திகதி பண்டார நாயகா சர்வதேச மண்டபத்தில் சிறீலங்கா பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவுக்கும் தமிழ் பேசும்தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்களுக்குமிடையே நடைபெற்ற மாநாடு நாம் எதிர்பார்த்ததுபோலவே எவ்வித பலனுமின்றி வெறும் புஸ்வாணமாகப் புகைந்து முடிந்துவிட்டது!

பண்டாரநாயகா சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றது—தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குரியவழி வகைகளை ஆராய்வதற்கு கூடிய மாநாடு என்பதை விட, அதுவும் மற்றோர் தேசிய அரசுப்பேரவைக்கூட்டம் போலவே நடந்துமுடிந்திருக்கிறது.

ஆட்சிபீடம் ஏறி ஆறரை ஆண்டுகளுக்கு மேலாக—81 மாதங்களாக — தமிழ்பேசும் மக்களுக்கு அநீதிக்கு மேல் அநீதி இழைத்து— கொடுமைக்கு மேல் கொடுமை புரிந்து—அடிமைகளிலும் கேவலமாக அடக்கியொடுக்கி வெறியாட்சி நடத்தியவர்கள்—தமிழினத்தை வெறும் தூசிலும் மோசமாக நாசப்படுத்தியவர்கள் — ஆணவம் தலைக்கேற அதிகார மமதை பிடித்து அலைந்தவர்கள்—தங்கள் ஆட்சி சேடமிழுக்கும் நிலையை அடைந்துள்ள நேரத்தில்—இன்னும் இரண்டே இரண்டு மாதங்களில் மண்மூடிப்போகவிருக்கும் தருணத்தில்- தமிழ் மக்களின் பிரச்சினைகள் மீது திடீர் அக்கறை காட்டுவதாக நாடகமாடுவது முற்றுமுழுதான ஏதோ ஒரு சுயநலத்தின் அடிப்படையிலேயே என்பதை சென்றவாரம் இப்பத்திகளில் எடுத்துக்காட்டியிருந்தோம்.

வல்லமையும், சக்தியுப், ஆயுளும் இருந்த கடந்த காலங்களில் — தமிழினத்தின் பிரச்சினைகளை பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பதற்கு சரியான தருணங்கள் கிடைத்தவேளைகளில் எல்லாம்— அதிகாரத் திமிருடன் எடுத்தெறிந்து நடந்தவர்கள் — ஆட்சியின் அஸ்தமன நேரத்தில் அதுவும் தேசிய அரசுப்பேரவை கூட்டங்களை பேரவையின் ஆயுட்காலம் முடிவடைதற்கு இரண்டு நாட்கள் முன்புவரை ஒத்திவைத்துவிட்டு தமிழினப் பிரச்சினைகளையிட்டு ஆராய்வதற்காக மாநாடு கூட்டிரூர்கள் என்றுல் அதுவெறும் ஆஷாட பூதித்தனம் என்பது தவிரவேறு எதுவாக இருககமுடியும்?

தூய்மையான நோக்கின்றி—அந்தரங்க சுத்தியின்றி—சத்தியத்தின் வழிகாட்டுதலின்றி—வெறும் சுயநலத்துக்காக மேற்கொள்ளப்படும் எந்தக் காரியமும் சித்தியடையப்போவதில்லை!

முதலில் பிரதமர் கூட்டிய இந்த மாநாடு, திட்டவட்டமான எந்தவித அடிப்படையுமின்றி கூட்டப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையென்ன? அது எப்படி உருவாகியது? அதற்கு யார் காரணம்? எப்பொழுதிருந்து தமிழினத்தின் பிரச்சினை மிக மோசமான நிலையை அடைந்தது? அதற்கு தீர்வுகாண வழியென்ன என்பனபோன்ற கேள்விகளுக்கு விடை காணும் நோக்குடன் சிறிமா பண்டாரநாயகா அவர்கள் இந்த மாநாட்டைக் கூட்டவில்லையென்பது மாநாட்டுக்கு அழைக்கப்பட்டவர்களின் பட்டியலைப் பார்த்தாலே தெளிவாகப் புரிகிறது.

1972ம் ஆண்டு மே 22ம் நாள் உருவாகிய புதிய அரசியற் சட்டம், தமிழ் மக்களின் இணக்கத்தையும் சம்மதத்தையும் துளியும் பெருமல் பெரும்பான்மையான தமிழ் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரித்து வெளியேறிய நிலையில் தான்தோன்றித்தனமாக ஒரு தலைப்பட்சமாக தயாரிக்கப்பட்டு தமிழ் ஈழத்தின்மீது பலவந்தமாக, துப்பாக்கிமுனையில் திணிக்கப்படத் தொடங்கிய காலத்திலிருந்தே, தமிழினத்தின் போராட்டம் உக்கிரமான கட்டத்தையடைய ஆரம்பித்தது, இந்த அரசியல் சட்டத்தை நிராகரித்துவிட்டு, தமிழ் மக்கள் தமது சுதந்திரத்துக்காக—தமிழ் ஈழத்துக்காக—தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையின்கீழ் போராடி வருகிறுர்கள். இதன் காரணமாகவே'தமிழர் பிரச்சினை' இன்றும் மங்காமல் மறையாமல் சூடாக இருந்துவருகிறது.

இந்த நாட்டிலே தமிழ் மக்களின் பிரச்சினையென்று ஒன்று உருவாகியதென்றுல் — அதற்கு முழுக்கமுழுக்க காரணமே சிங்கள அரசாங்கங்களின் நடவடிக்கைகள் தாம். தமிழ்பேசும் மக்கள் தாமாகவே எந்த ஒரு பிரச்சினையையும் உருவாக்கிக்கொள்ளவில்லை; சிங்கள அரசு ஏற்படுத்திய சிக்கல்களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவே அவர்கள் போராடிவருகிறுர்கள்.

தமிழர்களின் குடியுரிமை பறிப்பு — தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் — தமிழ்மொழிக்கு ஆட்சியுரிமை மறுப்பு—சிங்களம் மட்டும் சட்டம்—சிங்களத்திணிப்பு—தமிழினத்தின் சம்மதத்தை பெருத அரசியற் சட்டத்தை உருவாக்கி அதை தமிழ்மக்கள் மீது பலவந்தமாகத் திணிப்பது — தரப்படுத்தல் எனும் இனப்பாகுபாட்டுக் கொள்கையை கல்வியில் புகுத்தி தமிழ் மாணவரை நாசமாக்குவது—தமிழ்ஈழத்தை தமிழ் மக்களிடம் ஒப்படைக்காமல் அங்கு சிங்கள ஆயுதப்படைகளை குவித்து அதை ஒரு ஆக்கிரமிக்கப்பட்ட நாடாக அடக்கி ஆள்வது—தமிழ் மக்களின் தாயகத்தை தமிழ்மக்களிடம் சமாதானமாக ஒப்படைக்க மறுத்து சிங்கள ஏகாதிபத்தியத்தை அங்கு திணிப்பது — இவை அனைத்தும், சிங்கள அரசாங்கங்கள் ஏற்படுத்தியுள்ள பிரச்சினைகளாகும். இவற்றை எதிர்த்துத்தான், தமிழ் இனம் இனவிடுதலைக்காகவும் தன்னைப் பாதுகாக்கவும் போராடி வருகிறது.

# 'தற்காலிக உடன்படிக்கைகள் விடுதலை இயக்கத்தை பலவீனப்படுத்தும்!'

## கொழும்பு கருத்தரங்கில் ஒருமித்த கருத்து!

தமிழர் விடுதலைக்கூட்டணி அரசாங்கத்துடன் தற்காலிக ஏற்பாடுகள் ஏதாவது செய்வதால், தமிழினத்துக்கு சாதகமா? பாதகமா? இயக்கத்துக்கு அதனுல் நன்மை விளையுமா? தீமை விளையுமா? என்பது பற்றி தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொழும்புக்கிளை 23-2-77 புதன் கிழமை நடத்திய வாராந்தக் கருத்தரங்கில் ஆராயப்பட்டது. தற்காலிக ஏற்பாடுகள் இயக்கத்தை பின்தள்ளும்; போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் என்ற கருத்தே அங்கு மேலோங்கி நின்றது.

இக்கருத்தரங்கிற்கு திரு. ஈழவேந்தன் தலைமை தாங்கினர். நூற்றுக்குமேற்பட்டவர்கள் கருத்தரங்கில்கலந்து கொண்டனர். திரு. வண்ணை ஆனந்தன், கோவை மகேசன், சட்டதரணி கரிகாலன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

வண்ணை ஆனந்தன் பேசுகையில் கூறியதாவது:-

"தமிழ் இளைஞர்கள் இன்று விழித்தெழுந்து விட்டார்கள். விடுதலை விடுதலையென்று ஆர்ப்பரிக்கிறுர்கள். விடுதலைக்காக எதையும்—இழக்க—தம் உயிரையே இழக்க அவர்கள் சித்தமாகி விட்டார்கள். அவர்கள்வேகமுடன் செயற்பட்டு விடுதலை பெறுவதையே விரும்புகிறுர்கள். தற்காலிக ஏற்பாடுகள், இடைக்கால உடன்பாடுகள், எம் இயக்கத்தை பின்தள்ளி விடும். இளைஞர்களின் உற்சாகத்தை குன்றச் செய்து விடும். காலத்தை கடத்தி, வேகத்தை குறைத்து இயக்கத்தை பாழடிக்காமல், விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வெற்றி காண்போம்!"

திரு. ஈழவேந்தன் பேசுகையில் கூறியதாவது:—

"பாகிஸ்தான் போராட்டத்தின்போது ஜனுப்ஜின்ன ஒருபோதும் குறைந்தபட்சக் கோரிக்கையை கோரியதில்லை; தன்னுடைய நிலையிலிருந்து இறங்க மறுத்தார். அரசாங்கம் கொடுத்த சலுகைகளை போதாது போதாது என்று நிராகரித்தார். பிடிவாதத்துடன் நின்று வெற்றி பெற்றுர். இதேபோல நமது தலைவர்களும், நமது இயக்கமும் தனிநாடு கொள்கையில் உறுதியுடன் பிடிவாதத்துடன் நிலைதளம்பாது நிற்க வேண்டும். அரசாங்கம் படி இறங்கி வரவேண்டுமேதவிர நமது இயக்கம் படியிறங்கக் கூடாது."

திரு. கோவை மகேசன் பேசுகையில் கூறியதாவது:—

"தமிழர் விடுதலைக் கூட்டணிதான் தமிழினத்தின் ஒரே இயக்கம்; உதயசூரியன் கொடிதான் நமது ஒரேயொரு தேசியக்கொடி. தந்தை செல்வாதான் நம் தலைவர். இதில் மாறுபட்ட கருத்துடையவர்களுக்கு நமது இயக்கத்தின் நடவடிக்கைகள் பற்றி கருத்துக் கூறுவதற்கு இடமில்லை.

"இயக்கம் என்பது எவருடைய தனிச்சொத்தும் அல்ல; மக்கள்தான் இயக்கம். மக்கள் உருவாக்குபவர்களே இயக்கத்தின் தலைவர்கள். தலைவர்கள் தவறுவிடுகிறுர்களோ என்று சந்தேகம் தோன்றும்போது தட்டிக்கேட்க இயக்கத்தவர்களுக்கு உரிமையுண்டு. இயக்கத்தில் முதலில் நம்பிக்கை வையுங்கள். கூட்டணிக்குள் வந்து பணியாற்றுங்கள். கடமையை செய்து கொண்டு, தட்டிக்கேளுங்கள்.தெருவில் நின்று யாரும் தூற்றுதீர்கள்.

"பிரதமர் நடத்திய மாநாட்டுக்கு கூட்டணி இயக்கரீதியாக அழைக்கப்படவில்லை; கூட்டணி பா.உ.க்கள் தாம் தனிப்பட்ட முறையில் அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் சார்பில் அங்கு தெரிவிக்கப்பட்ட கருத்தும் தனிப்பட்ட எம்.பி.க்களின் கருத்தாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

"இயக்கத்தை பேச்சு வார்த்தைக்கு அழைத்து—அந்தப் பேச்சுவார்த்தைக்கு போய், தற்காலிக ஏற்பாடு செய்துகொள்வது நல்லதா அல்லதா என்ற கேள்வியெழுகிறது. தற்காலிக ஏற்பாடு மூலம் பறிபோகும் தமிழ் நிலத்தை ஒருவேளை காப்பாற்ற முடியுமா என்கிற இதயசுத்தியான ஆவலுடன் கோப்பாய் பா.உ. 'தற்காலிக ஏற்பாடு' பற்றி அங்கு பேசியிருக்கலாம். ஆனுல் அது பயன் அளிக்குமா என்பது கேள்விக்குறியே!

"முன்னர் செய்த இடைக்கால ஏற்பாடுகளுக்கு நடைபெற்றதென்னவென்பது நமக்குத் தெரியும். 20 ஆண்டுகளுக்கு மேலாக இடைக்காலம் இடைக்காலம் என்று காலம் கழித்துவிட்டோம். இந்த இடைக்காலத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து சுதந்திரத்தை பெற நாம் வேகமுடன் இயங்கவேண்டும்.

"எங்கள் தலைவர்கள் தியாகம் செய்தவர்கள். நிறைந்த அனுபவம் மிக்கவர்கள். அவர்களை நாம் நம்பத்தான் வேண்டும். தலைவர்களை நம்பாமல் இயக்கம் இல்லை; ஆனுல் தலைவர்களும் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக தம்மை வைத்துக்கொள்ளவேண்டும்.

திரு. கரிகாலன் பேசுகையில் கூறியதாவது:-

"ஓர் அரசியல் இயக்கம் உடன்படிக்கைகள் செய்வது தவறல்ல; ஆனுல் அது எப்போது, எந்தக்கட்டத்தில் எந்தச் சூழ்நிலையில் செய்ய

—8-ம் பக்கம் பார்க்க

**தமிழ் தேசிய இனத்துக்கு பிரச்சினைகளை உருவாக்கிய சிங்கள அரசாங்கம்தான்—தான்போட்ட சிக்கலை தானே அவிழ்ப்பதற்கு விரும்பினுல்—அதற்கு தனது திட்டம் என்ன என்பதை முன்வைக்கவேண்டுமேதவிர—அது தமிழ்மக்களின் வேலையல்ல!**

இந்தச் சிக்கல்களிலிருந்தெல்லாம் விடுபடுவதற்கு தகுந்த ஒரேயொரு மாற்றமுடியாத இறுதி மருந்தை வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டில் தமிழ்ஈழத் தீர்மானம் என்ற வடிவில் தமிழ் தேசிய இனம் கச்சிதமாக கண்டுபிடித்துவிட்டது. அந்தவழியிலே அது போராடி வருகிறது.

இந்த அடிப்படைக் கருத்தை பிரதமர் கூட்டிய மாநாட்டின்போது கோப்பாய் பா. உ. திரு. கதிரவேற்பிள்ளை அவர்கள் மிகவும் ஆணித்தரமாகவும் இறுக்கமாகவும் வலியுறுத்தியிருக்கிறுர்!

இதுவல்ல மருந்து வேறுமருந்து தன்னிடம் இருக்கிறதென்று சிங்கள அரசாங்கம் கருதினுல்—அதை தெரிவிப்பது அரசாங்கத்தின் வேலை! பிரதமரின் வேலை! அப்படி எந்த ஒருமாற்று திட்டத்தையும் பிரதமர் அங்கு சமர்ப்பித்ததாகவும் தெரியவில்லை!

தற்காலிக மருந்துகளை பல தடவை பயன்படுத்திப் பார்த்தும் தமிழினத்தின் அரசியல் நோய்க்கு குணம் காணவில்லையெனபதால்தான், நன்கு ஆராய்ந்து தெளிந்து நிரந்தரக்குணம் காணும் அருமையான மருந்தான தமிழ்ஈழத்தீர்மானத்தை வட்டுக்கோட்டை மாநாட்டில் தயாரித்தோம்!

அந்த மருந்தைக் கண்டதுமே நோய்ப்படுக்கையில் கிடந்த தமிழினம் நம்பிக்கையுடன் தலையை நிமிர்த்தி எழுந்து சற்று நிமிர்ந்து உட்கார்ந்துவிட்டது! அந்த மருந்தைப் பக்குவமாகத் தயாரித்து—அதற்கு ஏற்ற பத்தியங்களுடன் தமிழினத்துக்குக்கொடுப்போம்! சேடம் இழுக்கும் இன்றைய அரசுடன் சேர்ந்து வேறு தற்காலிக [illegible] தற்போதைக்கு [illegible] செலுத்தவேண்டியதில்லையென்பதே நமது திட்டவட்டமான கருத்தாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நமக்குத் தேவை பாலம் அல்ல ஈழம்!

## தேவராசா நாகராசா விடுதலை வரவேற்பில் காசி ஆனந்தன் முழக்கம்!

'வீண் போய்க் கொண்டிருக்கிறது காலம். சுயநலத் தேவைகளே தமிழனுக்கு முக்கியம் என்று சிலர் போடுகிறார்கள் ஓலம். ஆனால் இந்தநாட்டு இளைஞனுக்கு நன்றாகத்தெரியும் — நமக்குத் தேவைப்படுவது பாலம் அல்ல சுதந்திரத் தமிழ்ஈழம் தமிழ் இனத்தின் விடுதலைக் கோலம்.'

மேற்கண்டவாறு ஐந்து திங்கள் மட்டுநகர் சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்துமீண்ட விடுதலை வீரர்களான தேவராசா, நாகராசா ஆகியோருக்கு மட்டக்களப்பு மக்கள் அளித்த பிரமாண்டமான வரவேற்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு நீதிமன்றத்திலிருந்து 21-2-77 பிணையில் விடுதலையாகிய தேவராசா, நாகராசா ஆகியோருக்கு கல்லடிப் பாலச்சந்தியிலிருந்து பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. இச்சந்தியில் இருந்து நீளமான ஓர் ஊர்வலத்தில் இவர்கள் வீடுவரை அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஊர்வலத்தில் வழக்கறிஞர் சாம்தம்பிமுத்து அவர்களும் சிறைமீண்ட இளைஞர்களாகிய அல்போன்ஸ்மேரி, வசந்தன், சேயராசா, சிவஜெயம், சுதர்சன் ஆகியோரும் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த தங்கவேலாயுதம், வேணுதாஸ், மோகனச் சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தின் முடிவில் தேவராசாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கவிஞர் காசிஆனந்தன் அவர்கள் தொடர்ந்து பேசியதாவது:—

கல்லடி, கல்லடி புதுமுகத்துவாரம், கல்லடி உப்போடை, நொச்சிமுனை, மஞ்சத்தொடுவாய், ஆரைப்பற்றை ஆகிய கிராமங்கள் ஒரு குடும்பத்தின் உறவினர்கள். வீரமான ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இந்தப்பகுதியில் என்னுடைய தாய் பிறந்தாள். இதே பகுதியில்தான் 1972ம் ஆண்டுக்குப் பிறகு சிறைவாசம் அனுபவித்த கல்லடி யோசப், ரமணன், சேயராசா, ஆரையம்பதி தவராசா, தேவராசா, நாகராசா ஆகியோர் பிறந்து வளர்ந்தார்கள். தமிழ்ஈழ விடுதலைப்போரில் இப்பகுதி பத்து இளைஞர்களை இதுவரை சிறைக்கு அனுப்பியிருக்கிறது. இது ஒரு வீர மண்.

இன்று தேவராசா, நாகராசா ஆகியோருக்கு அளிக்கப்படும் வரவேற்பில் கலந்துகொள்ளும் மக்கள் கூட்டத்தை இப்பகுதியில் ராஜன் செல்வநாயகத்தால் திரட்டமுடியுமா? தேவராசாவோ, நாகராசாவோ மட்டக்களப்பின் ஆளும் கட்சி உறுப்பினர் அல்ல. ஆனாலும் அவர்களுக்குத்தான் கூட்டம் கூடுகிறது என்றால் பாலத்தையும் பாதையையும்விட விடுதலைப் போருக்கு தமிழர்கள் கூடிய மதிப்பைத் தருகிறார்கள் என்றுதான் பொருள். இவ்வாறு அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

கூட்டத்துக்கு திரு. சேயராசா தலைமை வகித்தார் திரு. சாம் தம்பிமுத்து, சிவஜெயம், தங்கவேலாயுதம் ஆகியோரும் உரையாற்றினர்.

## காசிக்கு இன்று மட்டுநகரில் வரவேற்பு!

சிறை சென்று மீண்ட உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுக்கு மாபெரும் வரவேற்பொன்று மட்டுநகரில் இன்று 27 — 2 — 77 ஞாயிறுக்கிழமை அளிக்கப்பட இருக்கின்றது. வரவேற்பினைத் தொடர்ந்து பொதுக் கூட்டமொன்றும் பாட்டாளிபுர மைதானத்தில் இடம்பெறும். பொதுக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களும், தமிழ் இளைஞர் பேரவை, மகளிர் பேரவை உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்கள்.

ஊர்வலம் ஊறணிச் சந்தியிலிருந்து பி.ப. 3.30 மணியளவில் ஆரம்பமாகி நகரின் மத்தியினூடாகச் சென்று கூட்ட மைதானத்தையடையும்.

## இராசதுரையும் சென்றார்

21-2-77 பண்டாரநாயகா சர்வதேச மண்டபத்தில் பிரதமர் கூட்டிய மாநாட்டுக்கு திரு. செ. இராசதுரை பா. உ.வும் சென்றிருந்தார். சென்ற புதன்கிழமை வெளிவந்த இதழில் அவரது பெயர் தவறுதலாக விடுபட்டுவிட்டது.

—ஆர்:

## தமிழ்இளைஞர்பேரவை மத்திய குழு கூடுகிறது!

அகில இலங்கை தமிழ் இளைஞர்பேரவையின் மத்திய குழுக்கூட்டம் இன்று (27-2-77)ஞாயிற்றுக்கிழமை காலை கொள்ளுப்பிட்டியிலுள்ள தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெறுகிறது. திரு, ஆ. ரகுபதிபால ஸ்ரீதரன் தலைமைவகிப்பார் மாவை சேனாதிராஜா சிறப்புரை நிகழ்த்துவார், அடுத்த பொதுத்தேர்தல், பேரவை எழுச்சி மாநாடு போன்ற முக்கிய விடயங்கள் அங்கு ஆராயப்படும்.

## தனிநாயக அடிகளார் பேசுகிறார்

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு கட்டுரைத்தொகுப்புநூலின் முதலாம் பாகம் 26ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படவிருக்கிறது. பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் அன்றையதினம் பி.ப. 5 மணிக்கு யாழ். வேம்படி றிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ் வெளியீட்டு விழாவில் அருட்திரு. சேவியர் தனிநாயகம் அடிகளார் மாநாடு பற்றி ஒரு சிறப்புரை நிகழ்த்துவார்.

தமிழகம், புதுடில்லி, ஈழம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 40க்குமேற்பட்ட தமிழ் அறிஞர்கள் சமர்ப்பித்துள்ள ஆராய்ச்சிக்கட்டுரைகளின் இத்தொகுப்பு சுமார் 500 பக்கங்களில் மிகச் சிறப்பான முறையில் அச்சிடப்பட்டுள்ளது. பிரதி ஒன்றின் விலை ரூபாய் 40. பிரதிகளை பெறவிரும்புவோர் திரு. வி. ஆர். வடிவேற்கரசன் இணைப் பொருளாளர். அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் (இலங்கைக் கிளை) 271செட்டியார் தெரு, கொழும்பு-11 என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

## "பத்திரிகைகளே நாட்டின் காவலாளிகள்!"

### —நீதவான் தீர்ப்பு!

"ஒரு தேசத்தின் காவலாளிகள் செய்திப் பத்திரிகைகளே. அவை மகத்தான சேவையை நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்றி வருகின்றன. சில சந்தர்ப்பங்களில் செய்திப்பத்திரிகைகள் வதந்திகளை அடிப்படையாக வைத்து செய்திகளை வெளியிடுவதும் உண்டு. வதந்திகளை அடிப்படையாக வைத்து ஒருவரையும் தனிப்பட்ட முறையில் பாதிக்காது செய்திகளை வெளியிடுவதற்கு செய்திப்பத்திரிகைகளுக்கு உரிமையுண்டு. மக்கள் விரும்பிப்படிக்கும்செய்திகளுக்கு தடை அல்லது முட்டுக்கட்டைகளைப்போடுவதைவிட— அப்படியான செய்திகளை பிரசுரிப்பதற்கு அனுமதியளிப்பதே விரும்பத்தக்கது!"

—மேற் கண்டவாறு வீரகேசரி நிருபர் திரு. தில்லைநாதனை விடுதலை செய்து தீர்ப்பளித்த கொழும்பு மாவட்ட நீதவான் திரு. டபிள்யூ குணரத்தின தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சுவிஸ் வங்கியில் பணம் வைத்திருக்கும் இலங்கையர் பற்றிய செய்தியொன்றை திரு. தில்லைநாதன் [illegible] ரன் வாரவெளியீட்டில் எழுதியிருந்தார். [illegible] பற்றிய தகவல் தந்தவரின் பெயரை வெளியிடும்படி செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திரு. தில்லைநாதனிடம் கோரியபோது, தில்லைநாதன் அதை வெளியிட மறுத்தார். அதன் பின்னர் தில்லைநாதன் மீது நீதிமன்றத்தில் செலாவணித்திணைக்களம் வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கை தள்ளுபடிசெய்து நீதவான் திரு. தில்லைநாதனை விடுதலைசெய்தார்.

பத்திரிகையாளரின் உரிமையை காப்பாற்றுவதில் [illegible] [illegible] சுதந்திரன் பாராட்டுகிறது.


## இப்போது விற்பனையாகிறது!

தமிழேந்தல் ஈழவேந்தன் எழுதிய

### தமிழ்மண் காப்போம் தாயகம் மீட்போம்

பல புதிய தகவல்கள், வரலாற்றுக் குறிப்புக்கள், பல அரசியல் மேதைகளின் அறிவுரைகள், அம்பிட்டியா குருத்துவ கல்லூரியில் நூல் ஆசிரியர் நிகழ்த்திய உரை ஆகியவற்றை உள்ளடக்கியது

3-ம் பதிப்பு

அதிக பக்கங்கள் — விலைரூபா ஒன்று மட்டுமே

தபால் செலவு 60 சதம்

வி. பி. பி. செல்லுபடியாகாது.

தொடர்பு கொள்க:

நிர்வாகி சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயகா வீதி
கொழும்பு-12

## கிளிநொச்சியில்

உங்கள் விவசாயத்தை வளம்படுத்த களை கொன்று உரமூட்ட பொருட்கள் உன்னத விலையிற் கொள்வளவு செய்ய நாடிடுவீர்.

### ஹரி ஹரன் ரேடர்ஸ்

கண்டி வீதி, கிளிநொச்சி




பாவியுங்கள் பளிச்சிடும் வெண்மைக்கு

### ரோயல் நீலம்

நீலம் என்று கேளாது ரோயல் நீலம் என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள்.

தயாரிப்பாளர்: தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

சிவா இன்டஸ்றீஸ்

112-1/3, 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.

விநியோகஸ்தர்கள்!

சேகர் அன் பிறதர்ஸ்

கொழும்பு. தொலைபேசி: 35049

## 'மில்க்வைற் சலவைப்பவுடர்'

துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப் பவுடர் வாங்கிப் பாவியுங்கள். பல அளவுகளில் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது.

ஓர் மில்க்வைற் தயாரிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரா காந்திக்கு ஆபத்து?



இந்தியப்பொதுத்தேர்தலுக்கு இன்னும் இரண்டு கிழமைகளேயிருக்கின்றன. தேர்தல் பிரசாரங்கள் உச்சக்கட்டத்தையடைந்துவருகிறது. சவால்களும், எதிர்ச் சவால்களும், ஆட்சிக்கு வந்தால் அதுசெய்வோம், இது செய்வோம் என்ற அறிவிப்புக்களுமாக இந்தியா முழுவதும் எதிரொலித்து வருகிறது. ஜனநாயகத் திருவிழாவில் பொதுத்தேர்தல் எனும் தேரை அரசியற் கட்சிகள் ஆரவாரத்துடன் போட்டிபோட்டு இழுத்து வருகின்றன.

ஆளும் இந்திரா காங்கிரசை எதிர்த்துப்போட்டியிடுவதில், இந்திய எதிர்க்கட்சிகள் அனைத்தும் வாக்குகள் சிதறுவண்ணம்தொகுதி உடன்பாடு செய்துகொண்டுள்ளது ஒரு பெரிய சாதனையே. எதிர்க்கட்சித்தலைவர்கள் குறுகிய காலத்தில் மிகவும் வேகமாக இயங்கி இந்த இணக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அகில இந்தியாவிலும் எதிர்க்கட்சிகள் எழுப்பிவரும் ஒரேயொரு கேள்வி—இந்தியாவுக்கு வேண்டியது ஜனநாயகமா, சர்வாதிகாரமா என்பதுதான். ஜனநாயகம் நிலவவேண்டுமானால் எதிர்க்கட்சிக் கூட்டணிக்கு வாக்களிக்கும்படியும், சர்வாதிகாரம்வேண்டுமானால் இந்திரா காங்கிரசுக்கு வாக்களிக்கும்படியும் ஒவ்வொரு கூட்டத்திலும் இந்திய எதிர்க்கட்சி தலைவர்கள் மக்களிடம் கூறிவருகிறார்கள். இந்திரா ஆட்சிக்கு வந்தால், இதுவே இறுதிப் பொதுத்தேர்தலாக இருக்கும் என்றும் அவர்கள் பிரசாரம் செய்துவருகிறார்கள். அத்துடன் எதிர்க்கட்சிகூட்டணி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் இந்திராவுக்கு எதிராக ஊழல் விசாரணைக்கமிஷன் நியமிக்கப்படும் என்றும் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றனர்.

இந்திராகாந்தியுடன் மீண்டும் ராஜ்நாராயண் மோதுகிறார். சென்ற பொதுத்தேர்தலிலும் ராஜ் நாராயண் இந்திராவுடன் போட்டியிட்டதும், பின்னர் இந்திரா காந்திக்கு எதிராக அவர் தேர்தல் ஆட்சேபனை வழக்குத் தொடர்ந்ததும், வழக்குத் தீர்ப்பில் இந்திராகாந்தியின் தேர்தல் செல்லாது என்று இந்திராவுக்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்பட்டதும்—இந்திரா காந்தி உடனடியாக 'இந்தியாவுக்கு ஆபத்து' எனப் புதிய கோஷம் ஒன்றை எழுப்பி அவசரகால நிலையைப் பிரகடனம்செய்து, இந்திய அரசியல் சட்டத்தையே தமக்குச் சார்பாகத் திருத்தி தொடர்ந்து பதவியில் நீடித்ததும்,—இந்திராகாந்தி நீதிமன்றத் தீர்ப்புக்கு தலைவணங்கி பதவிவிலகவேண்டுமென்று மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தத்தொடங்கியபோது, தமக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த ராஜ் நாராயண் உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரையும் இந்திராகாந்தி சிறைக்குள் தள்ளியதும் பழைய விஷயங்கள் என்றாலும் இப்போது இவையனைத்தும் மீண்டும் ஒருமுறை மக்கள் முன்வைக்கப்பட்டு தீர்ப்புக்கு விடப்பட்டுள்ளன.

இந்திரா காந்தி போட்டியிடும் தொகுதியில் அவருக்கு கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. தனது பதவியைக் காப்பாற்றிக்கொள்வதற்காக நீதிமன்றத் தீர்ப்பை அலட்சியப்படுத்தி, அரசியல் சட்டத்தையே மாற்றியமைத்து தன்னை எதிர்த்தஜெயப்பிரகாசர் போன்ற மூத்த தலைவர்களை— எதிர்க்கட்சித் தலைவர்களை சிறைக்குள் தள்ளி அவசரகால நிலைக்குள் நுழைந்துகொண்ட இந்திராவின் சுயநல சர்வாதிகாரப் போக்குக்கு சரியான பதிலடி தரும்படி எதிர்க்கட்சிகள் மக்களை கோரிவருகின்றன. ராஜ்நாராயனுக்கு மக்கள் மத்தியில் இப்போது அனுதாபம் அதிகரித்துள்ளது,

தமிழ் நாட்டைபொறுத்தவரையில் பழைய காங்கிரசுக்கும் திராவிடமுன்னேற்றக் கழகத்துக்கும் தொகுதி உடன்பாடு ஏற்படுமா ஏற்படாதா என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருந்து வந்தது. இரு கட்சிகளுக்கிடையே தொகுதி உடன்பாடு ஏற்படுவதைத் தடுப்பதற்கு திரைமறைவில் பல சக்திகள் வேலைசெய்துவந்தன. ஆயினும், சஞ்சீவரெட்டியின் நேரடித்தலையீடும், தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியின் விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மையும் சேர்ந்து பழைய காங்கிரஸ் — அதாவது ஜனதா கட்சி — தி.மு.க. தேர்தல் உடன்பாட்டுக்கு வழிவகுத்தது.

சென்னை மத்தியதொகுதி யாருக்கு என்பதிலே பெரிய இழுபறி இருந்து வந்தது. இத்தொகுதியில் பழைய காங்கிரஸ் தலைவர் பா. ராமச்சந்திரன் போட்டியிட வேண்டுமென்று விரும்பினார். அதே நேரத்தில் அத்தொகுதியை முரசொலி மாறனுக்காக தி. மு. க. ஒதுக்கியிருந்தது. எனினும், கருணாநிதி சென்னை மத்திய தொகுதியை பழைய காங்கிரசுக்கு விட்டுக்கொடுக்க இணங்கியதன் மூலம்; ஜனதா— தி.மு.க. கூட்டுக்கு வழிவகுத்து தாம் ஓர் அரசியல் சாணக்கியர் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்

சென்னை மத்தியதொகுதி தி. மு. கழகம் வெற்றிபெறுவதற்கு அதிக வாய்ப்புள்ள தொகுதி அத்தொகுதியில் கருணாநிதியின் சொந்த மருமகனை மாறனே போட்டியிடவும் இருந்தார். ஆயினும் மருமகனுக்கு தொகுதி



ஒதுக்குவதைவிட, அதை தியாகம் செய்தாவது எதிர்க்கட்சியின் ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்ற பரந்த நோக்கத்தின் அடிப்படையில், பழைய காங்கிரசுக்கு சென்னை மத்திய தொகுதியை விட்டுக்கொடுத்த கருணாநிதியின் பொறுப்புணர்ச்சி பாராட்டத்தக்கது.

தமிழ் நாட்டில், ஆளும் இந்திரா காங்கிரஸ், எம். ஜி. ஆரின் அனைத்திந்திய அண்ணா திமுக, வலது கம்யூனிஸ்ட்கட்சி, முஸ்லீம்லீக் ஆகியன ஒரு கூட்டணியிலும்—ஜனதாகட்சி, திமுக, மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்டுகள், தமிழ்நாடு முஸ்லீம் லீக், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி, கோவை செழியனின் அண்ணா திமுக, தமிழரசுக்கழகம் ஆகியன மற்றோர் கூட்டணியிலுமாக நேரடியாக மோதுகின்றன.

அவதூறுப் பிரசாரங்கள், ஆயிரத்தெட்டு ஊழல் வழக்குகள், சிறைக்கொடுமைகள், பத்திரிகைத் தணிக்கை கூட்டம்போடுவதற்குதடை போன்ற இன்னோரன்ன கொடுமைகள் கருணாநிதிக்கும், திமுகவுக்கும் எதிராக கடந்த ஓராண்டாக திட்டமிட்டு சுமத்தப்பட்டு வந்தபோதிலும் - இவற்றால் எல்லாம் அடித்தளத்தில் மக்களிடையே திமுகவுக்கு இருந்து வந்த செல்வாக்கை அணுவளவும் குறைந்துவிடவில்லையென்பதை திமுக கூட்டங்களுக்கு திரண்டு வரும் மக்கள் வெள்ளம் உறுதிப் படுத்துகிறது.

எனினும் தமிழ் நாட்டின் அரசியல் அலை எந்தப்பக்கமாக வீசுகிறது என்பதை லோக்சபைத் தேர்தல் முடிவுகள் ஓரளவுக்கு எடுத்துக்காட்டும் என்று நம்பலாம்.

## தி. மு. க. தேர்தல் அறிக்கை

தி.. மு. கழகம் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள சில பகுதிகள் வருமாறு:—

இந்திய நாட்டில் ஜனநாயகம் தழைக்கப்பாடுபட்ட நல்லேருழவர்களில் ஒருவரும், திராவிடக் கலாச்சாரத்தின் ஒருபெரும் தூதுவரும், ஒப்பற்ற தலைவருமான பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு தமிழ் நாட்டு மக்களால் தங்களுக்குப் பாதுகாப்பான கேடயமாகக் கொள்ளப்பட்டு பதினெட்டே ஆண்டுகளில் தமிழ் மாநிலத்தின் ஆளுங்கட்சியாக ஆட்சிபீடம் ஏறியது திராவிட முன்னேற்றக் கழகம்.

அண்ணா மறைந்த பிறகும் நெஞ்சைவிட்டகலாத அவர் நினைவுடன் அவர் தந்த இலட்சியங்களையும் ஏந்திக்கொண்டு, 1971 பொதுத்தேர்தலில், ஏற்கனவே இருந்த வலிமையை மேலும் மிக அதிகமாகப் பெருக்கி 138 இடங்களுக்கு மாறாக 184 இடங்களில் வெற்றிபெற்று, இந்த மாநிலத்தில் இதற்குமுன் யாரும் பெற்றிராத பெரும்பான்மையைப்பெற்று, இந்தியநாட்டு வரலாற்றில் ஒன்பது ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி நடத்திய 'ஒரே எதிர்க்கட்சி' என்ற சிறப்புப் பெருமையைப் பெற்றது திராவிட முன்னேற்றக்கழகம்.

பொதுமக்கள் தந்த ஜனநாயகத் தீர்ப்பின்படி பதவிக் காலம் முடிவடைய சுமார் ஐம்பது நாட்கள் இருக்கும்போதே "மக்கள் குரலே மகேசன் குரல்" என்ற தத்துவத்தைத் தரைமட்டமாக்குவதுபோல், சென்ற ஆண்டு ஜனவரித் திங்கள் 31ஆம் நாள் தி. மு. கழக ஆட்சி கவிழ்க்கப்பட்ட மறுவிநாடியே ஆயிரக்கணக்கானவர்கள் விசாரணையின்றிக் கைதிகளாக அடைபடவும், கழகத்தின் உறுப்பினர்கள்—ஆதரவாளர்கள், ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப் படுகிறவர்கள்—குடும்பம் குடும்பமாகக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படவும், அரசியல் வஞ்சம் தீர்க்கும் நோக்குடன் அடுக்கடுக்காக வழக்குகளை ஜோடித்துத்தொடுத்திடவும்—கழகத் தலைமையையும், கழகத் தளநாயகர்களையும்திட்டமிட்டு இழிவுபடுத்திடுவதின் வாயிலாகக் கழகத்தையே அழித்துவிடலாம் என்ற முனைப்புடன் காரியங்களை முடுக்கிவிடவும்—கழக ஏடுகள் "முன் தணிக்கை" செய்யப்பட்டு செய்திகள் இருட்டடிப்பு செய்யப்படவும் ஆன இவ்வளவு இடுக்கண்களையும் ஏற்றுக்கொண்டு, தமிழ் நாட்டு மக்கள் தயங்காமல் நீட்டிய ஆதரவுக் கரங்களின் துணையால் கடுங்காற்றிலும் அணையாத விளக்காக இந்த இயக்கம் ஒளிவீசிக்கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சியே ஏற்றுக்கொண்டு தீர்மானமாக நிறைவேற்றியதும், அகில இந்திய கட்சிகளான கம்யூனிஸ்டு போன்றவைகள் இயன்றளவும் வலியுறுத்தி வருவதுமான, ஏற்கனவே மாநிலங்களுக்கு இருக்கிற சுயாட்சித் தன்மையை முழுமையானதாக்க வேண்டுமென்ற கோரிக்கையை தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாலேயே அதனைப் "பிராந்திய உணர்வு" என்றும் "பிரிவினை வாதம்" என்றும் தவறான முறையில் குற்றங்கூறி — நெருக்கடி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு நிறைவேற்றிய அரசமைப்புத் திருத்தங்களின் மூலம் மாநிலங்களுக்கு இருந்த உரிமைகளையும் மத்திய அரசு பறித்துக் கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. 'மாநில சுயாட்சி' என்பதை தி.மு.கழகம் ஒரு கவர்ச்சி மிக்க கோஷம் என்பதற்காக அல்ல. அந்தக் கோஷம் தெரிவிக்கும் உண்மையான பொருளானமாநிலங்களுக்கு அதிகாரங்கள் இயன்றளவு பரவலாக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை வெளிப்படுத்துவதற்காகவே எடுத்துச் சொல்லி வருகிறது.

இப்போது ஒடுக்கப்பட்டிருப்பது மாநில உரிமைகள் மட்டுமல்ல; மனித உரிமைகளுமாகும்.

அரசாங்கம் நினைத்தால் எந்தக் குடிமகனின் உரிமையையும், உயிரையும் பறித்துக் கொள்ளலாம்.

அமைதியான முறையில் எடுக்கும் நடவடிக்கைகளையும், முறையான வேலை நிறுத்தத்தையும், அமைப்புக்களையும், கட்சியையும், மக்கள் இயக்கத்தையும் தொழிற்சங்கத்தையும் தேச விரோதமானவை என்று அறிவித்து விட்டுத் தடை செய்யலாம்.

எந்தவிதக் காரணமும் கூறப்படாமல், எந்தவித விசாரணையுமின்றி, ஒரு குடிமகனை நீதிமன்றத்துக்குள் நுழைய முடியாமல் தடுத்துவிட்டுக் காலவரம்பின்றி 'மிசா' போன்ற சட்டங்களின் கீழ் காவலில் வைத்திருக்கலாம்.

கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பேச்சுச்

—7-ம் பக்கம் பார்க்க

சுடர் CHUDAR மாசி இதழ்

இப்பொழுது விற்பனையாகிறது

- அமரர் ஜீ. ஜீ.யின் முகப்போவியம்
- தமிழகத்துத் தாமரை இருட்டடிப்பு செய்த சாலை இளந்திரையனின் கட்டுரை.
- கல்கி கண்ட தமிழ் மாநாடு
- புத்தளம் படுகொலை!
- நகைச்சுவை எழுத்தாளர் பாக்கிய நாயகத்துடன் ஒரு செவ்வி!
- முத்தானசிறுகதைகள், கட்டுரைகள்—
- காசி ஆனந்தன் தித்திக்கும் கவிதை.

இன்னும் பலஅம்சங்களுடன்

எங்கும் விற்பனையாகிறது

விலை ரூபா 1-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத் தேசிய விடுதலைப் போராட்டம்

**ஒரு தேசத்திற்கு அதன் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமை உண்டு. இதைப்பற்றி ஸ்டாலின் குறிப்பிடுகையில் "தன்னுடைய எதிர்காலத்தையும், வாழ்க்கை முறையையும் தானுகவே நிர்ணயிக்கும் உரிமை ஒரு தேசத்திற்கு உண்டு. பிரிந்து போய் சுய அரசை உருவாக்கும் உரிமை கூட ஒரு தேசத்துக்கு உண்டு" என்றுர். இதன் அர்த்தம் எல்லாத்தேசங்களும் நிச்சயமாகப் பிரிந்து போகவேண்டும். என்பது இல்லே. ஆனல் அடக்கப்படும், ஆளப்படும் ஒரு தேசத்தின் பெரும்பான்மை மக்கள் பிரிந்துபோகவேண்டும் என்ற முடிவிற்கு வந்தால் அந்த உரிமை அவர்கட்கு உண்டு என்பதே மார்க்சிஸ்டுகளின் கருத்தாகும். இதன் அடிப்படையில் அடக்கி ஆளப்படும் தமிழ் இனம், சிங்கள ஏகாதிபத்திய சுரண்டலிலிருந்து தம்மை விடுவித்துத் தனிநாட்டை நிறுவும் உரிமையைப்பெறுகிறது. ஈழத் தமிழ் நாட்டின் சுதந்திரப்போராட்டத்தை எதிர்ப்பவர்கள் எவ்வகையிலும் மார்க்சிஸ்டுகள் அல்லர்.**

மார்க்ஸ் கைத்தொழில் புரட்சிக்காலத்தில் வாழ்ந்தவர். தொழிலாளர்கள் படும் இன்னல்களை நேரிடையாக அறிந்தவர். அக்காலத்தின் அவர்களுடைய இன்னலகளைப் பற்றி விபரிப்பதிலே அதிக காலத்தைச் செலவிட்டார். அத்துடன் ஹேகல், றிக்கார்டோ, கோம்ற் ஆகியோரின் தத்துவப்பொருளாதாரக்கோவைகளை ஆராய்வதிலும் அதிக காலத்தைச் செலவிட்டார். இதனல் அந்தக் கால கட்டத்தில் ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுக்காத தேசிய விடுதலைப்போராட்டம் பற்றி அடிப்படையான ஆராய்ச்சிகளையோ அன்றேல் தர்க்கரீதியான விஞ்ஞான விளக்கங்களையோ மார்க்ஸ் அளிக்கவில்லே. ஆனல் அக்காலத்தில் நடந்த தேசிய விடுதலைப் போராட்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டு இவ் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவும் அளித்திருக்கிறுர்.

19வது நூற்றுண்டில் ரஷ்ய ஏகாதிபத்தியத்திலிருந்து போலந்து பிரிந்து போகப் போராடியபோது மார்க்ஸ் இப் பிரிவினையை ஆதரித்தார். ஒரு கலாச்சாரத்தை அழிக்கமுனையும் போது, ஒரு தேசம் மற்றொரு தேசத்தை அழிக்க முனையும்போது பிரிவினை என்பது தவிர்க்கமுடியாதது என்பதே மார்க்சின் கருத்தாகும். அத்துடன் அடக்கப்படும் தேசம் நடத்தும் விடுதலைப்போராட்டத்திற்கு

கலாநிதி
**இராஜ.இராஜேந்திரன்**
(நியூயோர்க்—அமெரிக்கா)

ஆளும் தேசத்தைச்சேர்ந்த தொழிலாளர்களும், மார்க்சிஸ்டுகளும் ஆதரவளிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

போலந்துப் பிரிவினைப் போராட்டம் நடந்தபோது அதனை எதிர்த்த ரஷ்ய கம்யூனிஸ்ட் டான லோபாடினைப் பற்றிக் குறிப்பிடுகையில் "போலந்து பிரச்சினைதான் லோபாடினின் பலவீனப் பகுதி. இப் பிரச்சினையைப் பற்றி இவர் கதைக்கும் போது, . அயர்லாந்தை அடக்கி ஆளும் ஆங்கில ஏகாதிபத்திய வாதிகளைப் போல் இவர் பேசுகிறுர்"

தமிழ் ஈழ விடுதலைப்போராட்டத்தை சிங்கள மார்க்சிஸ்டுகள் லோபாடினின் நிலையையே ஒத்தவர்கள் இவர்கள் மார்க்சின் இக் கருத்துக்களை தீரஆராய்ந்து தமிழ் ஈழத்திற்கு சுதந்திரம் அளிக்க சிறீலங்கா முன்வர வேண்டும் எனப் போராட்டம் நடாத்திட வேண்டும்.

அயர்லாந்தின் விடுதலைப் போராட்டக்காலத்தில் "அயர்லாந்து இங்கிலாந்திலிருந்து பிரிவது நடைபெறக்கூடிய காரியமல்ல" என ஆரம்பத்தில் கூறிய மார்க்ஸ், பின்னர் "அயர்லாந்து இங்கிலாந்திலிருந்து பிரிவது தவிர்க்கமுடியாதது" எனக் குறிப்பிட்டார்.

1867ல் அயர்லாந்தின் சுதந்திரப் போராட்டத்திற்கு முழு ஆதரவையும் அளித்த மார்க்ஸ், நவம்பர் 2ந் திகதி ஏஞ்சல்ஸ்க்கு எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் ... "இன்று அயர்லாந்திற்குத் தேவையானது என்ன?... (1) சுய ஆட்சியும், இங்கிலாந்திலிருந்து சுதந்திரமும் (2) விடுதலையின் பின்னர் விவசாயிகளின் புரட்சியும்...இந்த நிலையில் இங்கிலாந்தில் உள்ளதொழிலாளர்கட்கு பகரவேண்டிய அறிவுரைகள் என்ன? என்னுடைய கருத்துப்படி அயர்லாந்து—இங்கிலாந்து ஒன்றியத்தை இவர்கள் உடைத்தெறியவேண்டும். உ+ம் இங்கிலாந்திலிருந்து அயர்லாந்து பிரிந்து போகவேண்டும். இது சட்டரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் சரியாக இருப்பதால் அயர்லாந்துப் பிரிவினைக்கு ஆதரவான கொள்கையை இங்கிலாந்தின் கட்சியின் பிரகடனங்களில் சேர்க்க வேண்டும்"

டிசம்பர் 10, 1869ல் சர்வதேச கவுன்சிலில் "அயரிஸ் கேள்வி" என்னும் தலைப்பில் பேசுகையில், ஒருபடி மேலே போய், மார்க்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

"இங்கிலாந்தின் தொழிலாளர்கள் தங்களுடைய நேரடியான, முழுமையான நன்மைக்காக வேண்டியாவது இங்கிலாந்திற்கும் அயர்லாந்திற்குமுள்ள தொடர்பை அறுக்கவேண்டும். இதிலே நான் முழு நம்பிக்கையுள்ளவனுக இருக்கிறேன்....நான் நீண்ட காலமாக, இங்கிலாந்தின் தொழிலாளர்களின் உதவியுடன் அயர்லாந்தின் பிற்போக்குவாதிகள் தூக்கிஎறியப்படக்கூடும் என நம்பியிருந்தேன். இதைப்பற்றி ஆழமாகச் சிந்தித்தால் இது நடைபெறமாட்டாது எனப்படுகிறது. அயர்லாந்து பிரிந்துபோகாவிட்டால் இங்கிலாந்தின் தொழிலாளர்கள் என்றுமே எதுவிதத்திலும் எக்காரியத்தையும் சாதிக்கமுடியாது."

தமிழ்ஈழத்தின் மார்க்சிஸ்டுகள் — அவர்கள் உண்மையான மார்க்சிஸ்டுகளாக இருந்தால்—மார்க்சின் கருத்துக்களை ஏற்று ஈழதேசிய விடுதலைப் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொள்ளவேண்டும்.

### சர்வதேச மாநாடு தீர்மானம்—1896

1896ல் லண்டனில் கூடிய மார்க்சிஸ்டுகள் (லண்டன் சர்வதேச மகாநாடு) முதன் முறையாக சுயநிர்ணய உரிமையைத் தமது கொள்கைகளில் ஒன்ருக ஏற்றுக் கொண்டனர். அவர்களுடைய தீர்மானம் பின்வருமாறு (ஜேர்மன் மூலத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

"இம் மகாநாடு எல்லாத் தேசங்களினதும் சுயநிர்ணய முழு உரிமைகளை ஆதரிக்கிறது."

இம் மகாநாட்டின் பின்னர்தான் மார்க்சிஸ்டுகள்

## ஓர் அரசியல் ஆய்வு [2]

ஒவ்வொரு தேசிய விடுதலைப் போராட்டங்களின்போது மாத்திரம் தமது கருத்துக்களை வெளியிடாது, பொதுவான முறைப்படுத்தப்பட்ட தர்க்கரீதியான கொள்கையை உருவாக்கி விரிவுபடுத்தினர். இம் மார்க்சிஸ்டுகளில் லெனினும், ஸ்டாலினும் முக்கியமானவர்கள்.

### லெனினும் தேசிய விடுதலைப் போராட்டமும்

ஒரு தேசத்தின் சுயநிர்ணய உரிமைகள் என்றுல் என்ன? அவை எவை? இக் கேள்விகளுக்குத் தெளிவாக விளக்கம்கொடுத்த லெனின் "சுயநிர்ணய உரிமைகள் என்று கூறும்போது நாம் அதன் சட்ட திட்டங்களைப் பற்றிக் கவலைப்படவில்லே.

ஒரு தேசத்தின் சரித்திர—பொருளாதார காரணங்களையே நோக்குகிறேம்.... இதன் அடிப்படையில் சுயநிர்ணய உரிமைகள் எனக் கூறும்போது ஒரு தேசம் மற்றய தேசத்திலிருந்து அரசியல் ரீதியாகப் பிரிந்து சுதந்திர நாடாக மலர்வது என்ற முடிவிற்கு வரவேண்டிய நிலையில் உள்ளோம்."

இந்த லெனினிசக் கொள்கையின்படி அடக்கி ஒடுக்கப்படும் தமிழ்த்தேசிய இனம் —தமிழ் பூர்சுவாக்கள் மாத்திரமல்ல தமிழ் விவசாயிகளும் தொழிலாளர்களும் சிங்கள ஏகாதிபத்தியத்தினுல் நசுக்கப்படுகிறுர்கள்—தனது சுயநிர்ணய உரிமையான 'சுதந்திர நாடு' ஒன்றினைத் தாபித்தேயாக வேண்டும்.

இவ் விடுதலைப் போராட்டம் பூர்சுவாக்களால் தலைமை தாங்கப்படுவதால் இப் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கமுடியாது எனக் கூறிடும் சிலருக்கு லெனின் ரோசா லக்சம் போக்கிற்குக் கொடுத்த பதிலையே தருகிறேம் — "அடக்கப்படும் தேசத்தின் பூர்சுவாக்கள் சுரண்டும் தேசத்திற்கு எதிராகப் போராடுவார்களானுல், நாங்கள் ஒவ்வொரு கட்டத்திலும் இவ் விடுதலை போராடடத்திற்கு எல்லோரையும்விடத் தீவிரமான ஆதரவு அளிப்போம்."

ஆகவே ஈழத்தில் "முற்போக்குவாதிகள்" எனத் தம்மை அழைத்துக்கொள்ளும் சிலர் இனியும் விதண்டாவாதங்களை விடுத்து, மார்க்சிய — லெனினிச வரைவிலக்கணங்களின்படி உண்மையான முற்போக்குப் பாதையான தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட முன்வர வேண்டும்.

லெனின் வெறும் அறிவுரைகளுடன் மாத்திரம் நிறுத்திக்கொள்ளவில்லே. ருசிய நாட்டின் ஒரு தேசமான யுக்ரேனியாவில் சிலர் தனிநாட்டுப் போராட்டம் நடத்த முன்வந்தபோது, யுக்ரேனியாவிற்குப் பிரிந்து போகும் உரிமை உண்டென்றும் இதை ருசியர்கள் என்றுமே மறுக்கக்கூடாது என வாதிட்டதோடு, ஒரு தேசம் பிரிந்துபோய் சுதந்திர நாட்டை அமைக்கும் அதன் உரிமையை விளக்கி ருசியாவெங்கும் மக்களுக்கு அரசியல் அறிவை ஊட்டினுர்.

எல்லாவகையிலும் பிரதேச சுயாட்சி இருந்தும்கூட 1905ல் நோர்வே சுவீடனிலிருந்தும் பிரிந்துபோகப் போரிட்டபோது, இப்பிரிவினையை லெனின் ஆதரித்தார். நோர்வே பிரிந்து போவதற்கு, அதனை அடக்கி ஆண்ட நாடான சுவீடனைச் சேர்ந்த மார்க்சிஸ்டுகள் அளித்த ஆதரவைப் பாராட்டிய லெனின் "சுவீடனின் மார்க்சிஸ்டுகள் நோர்வேயின் பிரிவினையை ஆதரிக்காதுவிட்டிருந்தால், மார்க்சிசக் கொள்கைக்கே பெரும் துரோகம் இழைத்தவர்களாவர்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாம் ஏற்கனவே ஆராய்ந்த மார்க்சிச — லெனினிசக் கொள்கையிலிருந்து நாம் அறியவேண்டிய முக்கிய விடயங்கள் மூன்று உள்ளன.

1) தமிழ்ஈழம் என்பது ஒரு தேசம் தமிழர்கள் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். நாம் எவ்வகையிலும் சிறுபான்மையினர் அல்லர்.

2) தமிழ்ஈழத்தின்தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளித்து அதில் பங்குகொள்ள வேண்டியது ஒவ்வொரு தமிழ் மார்க்சிஸ்ட்டின் கடமையாகும். அன்றேல் மார்க்சிசக் கொள்கையைச் சொந்த நலனுக்காக விபச்சாரப்படுத்திய குற்றத்திற் குள்ளாவார்கள்.

3) தமிழ் தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமையான 'சுதந்திர தமிழ் நாடு' அமைக்க முயற்சிக்கும் போராட்டத்திற்கு சிங்கள மார்க்சிஸ்டுகள் ஆதரவளிக்க வேண்டும். அத்துடன் தமிழ்த் தேசிய இனம் சுதந்திரம் பெறவேண்டிய அவசியத்தை சிங்கள மக்களுக்கு இவர்கள் எடுத்துரைக்கவேண்டும்.

---

—6-ம் பக்கத் தொடர்

சுதந்திரம் இன்னபிற சுதந்திரங்களை அரசியல் உள் நோக்கத்துடன் பாரபட்சமான முறையில் தடுத்து நிறுத்திவிடலாம்.

இவைகளையெல்லாம் மத்திய அரசாங்கம் நினைக்காமல் இருந்ததா? நினைத்ததைச் செய்தும் முடித்தது. மேலும் தொடர்ந்து செய்வதற்கான பிடியையும் அண்மையில் நிறைவேற்றிக் கொண்ட உரிமைகளைப் பறிக்கும் சட்டங்களின் மூலம் வைத்துக் கொண்டிருக்கிறது.

கழக ஆட்சி கலைக்கப்பட்டு கடந்த ஓராண்டு காலத்தில் மத்திய அரசின் ஆட்சியின் கீழ் தமிழ்நாட்டு மக்கள் அடைந்திருக்கும் இன்னல்களைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

தமிழ்மொழிப் பற்றினையும் உணர்ச்சியையும் இந்திய ஒருமைப்பாட்டுக்கு விரோதமானவை என்று இழிவுபடுத்துகிறசெயலுக்கு ஊக்கம் தரப்பட்டு வருகிறது.

இந்தியா முழுமையும் ஜனநாயகத்தை நசுக்கும் வகையில் ஏற்பட்டுள்ள நிலைமைகளையும், மாற்றி அமைத்து மக்களுக்காகப் பாடுபட வேண்டியது தி. மு. கழகத்தின் கடமையாகும்.

இன்று இந்த நிலைமையில் வாக்காளப் பெருமக்களின்

## உலகை சுற்றி ஒரு கண்ணோட்டம்

முன் எழுந்துள்ள கேள்விகள் யாவை?

நாட்டில் மற்ற கட்சிகளுக்கும் வாய்ப்பிருக்கக் கூடிய மக்களாட்சி முறையா?

அல்லது ஒரே கட்சிதான் இருந்திடவேண்டுமென்ற காட்டாட்சி முறையா?

சுதந்திரமான நீதித்துறையின் இயக்கமா?

அல்லது கட்டுப்படுத்தப்பட்ட நீதி தேவர்களின் மயக்கமா?

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற தத்துவமா?

அல்லது சட்டத்தின் ஆட்சிக்குச் சமாதி எழுப்பிவிட்டு ஆளுக்கொரு நீதி என்ற ஆதிக்கமா?

கட்டுப்பாடும் ஜனநாயகமும் இணைந்த நிலையா?

அல்லது கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகத்தின் தற்கொலையா?

மக்களிடையே அமைதியும் உரிமையும் தவழும் சூழலா?

அல்லது அச்சுறுத்தலும் அரசியல் வஞ்சம் தீர்ப்பதுமான சூதுச் சூழலா? சுருக்கமாகச்சொன்னுல் ஜனநாயகமா? சர்வாதிகாரமா?

இவ்வாறு தி. மு.கதேர்தல் அறிக்கை கூறுகிறது.

—கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்காலிக உடன்..

—4-ம் பக்கத் தொடர்

வேண்டும் என்பதே கேள்வி. செல்வாக்கை இழந்து அஸ்தமன காலத்துக்கு வந்துள்ள இன்றைய அரசாங்கத்துடன்—தமிழர் விடுதலைக்கூட்டணியே தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனம் என்பதையே ஏற்கமறுத்து தமிழ் துரோகிகளை தமிழினத்தின் தலைவர்களாக உலகுக்கு காட்டிவரும் அரசாங்கத்துடன் என்ன உடன்படிக்கை வேண்டிக்கிடக்கிறது?

"இன்றைய நிலையில்பேச்சுவார்த்தைகளும், உடன்படிக்கைகளும், இயக்கத்தின் ஆணிவேராக விளங்கும் இளைஞர்களிடையே விரக்தியையும் சோர்வையும் புகுத்திவிடும்.

"நாம் நமது உச்சக்கட்டக் கோரிக்கையிலிருந்து ஒருபோதும் படியிறங்கக்கூடாது; குறைந்தபட்சக் கோரிக்கையை முன்வைத்து ஒருபோதும் நாமாக வலியப் பெற்றபின்னர், உதைத்துத் தள்ளினால் என்னசெய்வது?"

—இப்படியொரு சாரார் கேட்கிறார்கள்.

"தமிழ் ஈழத்தை மீள அமைப்பதென்பது வட்டுக்கோட்டை மாநாட்டுத் தீர்மானம். அந்தத் தீர்மானத்துக்கு செயலுருவம் கொடுக்கும் நடவடிக்கைகளில் கூட்டணி ஈடுபடவேண்டுமே தவிர — தற்காலிக ஏற்பாடுகளில் ஈடுபடுவது விடுதலைப் போராட்டத்தை பின்தள்ளச்செய்துவிடும். பாதையை திசைதிருப்பிவிடும். எனவே எதிர்வரும் பொதுத்தேர்தலை தமிழ்ஈழம் அமைப்பதற்கான பொதுசன வாக்கெடுப்பாக நடத்திமுடித்து, அதன் பின்னர் போராட்டத்திலீடுபடவேண்டும். தற்காலிக ஏற்பாடுகளில் இறங்கி, இயக்கத்தின் ஈட்டிமுனைகளான இளைஞர்களின் விரக்தியை வளர்க்கக்கூடாது.

"அது மட்டுமன்றி, தமிழர்விடுதலைக்கூட்டணியினர் அந்தரங்க சுத்தியுடன் தனிநாடு கோரவில்லை; பேரம் பேசும் நோக்கத்துடன்தான் தனிநாடு கோருகிறார்கள் என்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் தெரிவித்து வந்த அச்சமும்இதன் மூலம் உண்மைபோல ஆகிவிடும்.

இது பிறிதொரு சாராரின் கருத்து.

இவ்வாறு பலவிதமான கருத்துக்கள் நிலவிவந்த போதிலும் — கூட்டணியை இயக்க ரீதியில் இதுவரை எதுவித பேச்சுவார்த்தைக்கும் அரசாங்கம் அழைக்கவில்லை.

அப்படி கூட்டணியை இயக்கரீதியாக பேச்சுவார்த்தைக்கு அரசு அழைக்குமானால் செல்வதா, இல்லையா? — சென்றால் என்ன அடிப்படையில் பேசுவது? என்ற பிரச்சினைகள் 3ம், 4ம் திகதிகளில் நடைபெறும் கூட்டணி நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் ஆராயப்படும் என்று தெரிகிறது.

## தற்காலிக ஏற்...

—1ம் பக்கத் தொடர்

படை, தனி முதலமைச்சர், தனிச் சட்டசபை வைத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு) வழங்கப்படுமானால் — அதை ஒரு தற்காலிக ஏற்பாடாக ஏற்றுக்கொண்டு இந்த அரசாங்கம் பதவியில் நீடிப்பதற்கு உதவி செய்தாலும் பரவாயில்லை. மாநில சுயாட்சியை ஒருபடியாக வைத்துக் கொண்டு தனிநாட்டுக்குப் போராட முடியும். ஆனால் பதவியை நீடிக்க உதவியை பேசப்போகக்கூடாது. நாம் நமது இலட்சியத்திலேயே நிற்கவேண்டும்; அரசாங்கம் தான்' குறைந்தபட்சமாக இன்னதைத் தருகிறேன் என்று கூறவேண்டும்.

1957ம் ஆண்டு பண்டா—செல்வா ஒப்பந்தம் இந்த அடிப்படையில்தான் உருவாகியது. அதேபோல இன்றைய நிலையிலும் தனிநாடு கோரிக்கையிலிருந்து படியிறங்கிப் பேச்சுவார்த்தைக்கு போவது நம்மைப் பலவீனப்படுத்திவிடும்!


சிறீதேவி (கிண்ணியா) 1ம் திகதி முதல்
தினசரி — 6-45 — 10-00 மணி
ஜெய்சங்கர் —நடித்த
**பந்தாட்டம்**
அடுத்த படம்
சிவாஜி கணேசனின்
ராஜபார்ட் ரங்கதுரை (கலர்)

**செல்லமகால்** 7-வது வாரம்
கமலஹாசன், ஸ்ரீவித்யா,
ஜெயசுதா, சுந்தரராஜன்
நாகேஷ் நடித்த-
கே. பாலச்சந்தரின்
**அபூர்வ ராகங்கள்**


**கெயிட்டி**
கண்ணப்பா, அஞ்சலிதேவி, முத்துலட்சுமி,
காக்கா ராதாகிருஷ்ணன், மு. கருணாநிதி
நடித்த—
**டவுன் பஸ்**
(புத்தம் புதிய கொப்பி)

**றீகல்** (மட்டுநகர்)
ஜெய்சங்கர்—சாவித்திரி
-நடித்த-
**தாய்க்கொரு பிள்ளை**

**கிங்ஸ்லி-லிடோ** 6வது வாரம்
யாழ் நகர்
முத்துராமன், ஏ. வி. எம். ராஜன்,
லதா, நிர்மலா, சோ, மனோரமா
நடித்த
**வீட்டுக்கு வந்த மருமகள்**

**வெலிங்டன்** (யாழ்நகர்)
எம்.ஜி. ஆர், சரோஜாதேவி நடித்த-
**பணக்கார குடும்பம்** புதிய கொப்பி

12-வது வாரம்
**கெப்பிட்டல் - விஜயா**
(மட்டுநகர்)
எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா,
[இரு வேடங்களில்]
சந்திரகலா நடித்த-
**உலகம் சுற்றும் வாலிபன்**
(ஈஸ்மென் கலர்)

**பிளாசா** 7-வது வாரம்
கமலஹாசன், ஸ்ரீவித்யா, ஜெயசுதா, சுந்தரராஜன்
நாகேஷ் நடித்த-
கே. பாலசந்தரின்
**அபூர்வ ராகங்கள்**


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1977-ம் வருடம் பெப்ரவரி மாதம் 27-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org